# உதயன்

விலை ரூபா 6.00

ர:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 17 ஞாயிற்றுக்கிழமை (01-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:217


## நள்ளிரவில் ஜெயலலிதா அரசின் பழிவாங்கும் பாய்ச்சல்!

# டுக்கை அறையிலிருந்து கருணாநிதியை

# தரதரவென இழுத்துச் சென்றது பொலீஸ்!



ரதரவென் கருணாநிதி இழுத்துவரப்படும் காட்சிகள்.

## சென்னை மத்திய சிறையில் அவர் அடைப்பு

சென்னை,ஜூலை1

**திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான கலைஞர் மு.கருணாநிதியின் வீட்டுக்குள் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் திமுதிமுவெனப் புகுந்த தமிழக மாநிலக் காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் அவரது படுக்கை அறைக் கதவை உடைத்து, உள்புகுந்து படுக்கையில் இருந்த கருணாநிதியை முரட்டுத்தனமாகத் தரதரவென இழுத்துச் சென்றனர்; பின்னர் அவர் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.**

சென்னையில் மேம்பாலம் கட்டியதில் 12 கோடி ரூபா அளவில் மோசடி இடம்பெற்றதாகத் தெரிவிக்கும் குற்றச்சாட்டின் பேரிலேயே கருணாநிதி கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சென்னை ஒலிவ் சாலையில் - கோபாலபுரத்தில் - உள்ள, தமது வீட்டின் மேல்மாடியிலுள்ள தமது படுக்கை அறையில் நள்ளிரவுவேளை ஆழ்ந்த நித்திரையிலிருந்த 78 வயது வயோதிபரான கருணாநிதியை, அவரது வீட்டிலிருந்த காவலர்களைப் புறக்கணித்துத் தள்ளி விட்டு உள்ளே நுழைந்து அறைக் கதவை உடைத்துத் திடீரெனப் புகுந்த பொலீஸார் அவரை முதுகுப் பக்கத்தால் வளைத்துப் பிடித்துத் தரதரவென இழுத்துக் கீழே கொண்டு வந்தனர்.

"என்னைக் கொல்லுறாங்க பாவிகள்" என்று கருணாநிதி கத்திக் கதறக்கதற அவரைப் பொலீஸார் மோசமான - மனிதாபிமானமற்ற - முறையில் இழுத்து வந்த காட்சியை கோபாலபுரத்தில் தயாராக இருந்த 'சன் ரி.வீ.' தொலைக்காட்சிச் செய்தியாளர்கள் தமது கமெராவுக்குள் பிடித்துக் கொண்டார்கள்.

நேற்றுப் பகல் முழுவதும் அடிக்கொரு தடவை ஒளிபரப்பான இந்தக் காட்சியால் அகில இந்தியாவே பரபரப்பிலும் அதிர்ச்சியிலும் ஆழ்ந்தது. கருணாநிதிக்கு ஆதரவாகவும், ஜெயலலிதா அரசின் மூர்க்கத்தனமான பழிவாங்கும் பாய்ச்சலுக்கு எதிராகவும் கட்சி வேறுபாடின்றி இந்தியா முழுவதி (14ஆம் பக்கம் பார்க்க)

## வாஜ்பாய் கடுஞ்சீற்றம்!

புதுடில்லி,ஜூலை1

கருணாநிதி கைதுசெய்யப்பட்ட முறை குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கடும் சீற்றமடைந்திருப்பதாகச் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

பிரதமர் வாஜ்பாய் தனது தேசிய முன்னணி அரசின் முக்கிய கூட்டணிக் கட்சியான தி.மு.கவின் தலைவர் மிகக் கீழ்த்தரமான முறையில் நடத்தப்பட்டிருப்பது குறித்து விசனம் அடைந்திருப்பதாகவும் -

தமது மத்திய அரசின் அமைச்சர்களான முரசொலிமாறனும், ரி.ஆர். பாலுவும் மாநிலப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டமை தமது அரசுக்கு இழைக்கப்பட்ட இழுக்கு என்று அவர் கருதுவதாகவும் - கூறப்படுகின்றது.

கைது தொடர்பான சம்பவங்களைப் பிரதமர் கடுமையாக எடுத்துக் (14ஆம் பக்கம் பார்க்க)

## நிலைமையை இந்திய ஜனாதிபதி உன்னிப்பாகக் கவனிக்கின்றார்

புதுடில்லி,ஜூலை1

தமிழக நிலைமை குறித்து இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் கூர்ந்து கவனித்து வருவதாக ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி நாராயணன் நேற்று தமிழக மாநில ஆளுநர் பாத்திமா பீபியுடன் தொடர்பு கொண்டு கருணாநிதியின் உடல்நலம் குறித்து விசாரித்ததாக ஜனாதிபதி மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழக நிலைமை குறித்து இந்தியப் பிரதமர், ஜனாதிபதியுடன் அடிக்கடி தொலைபேசி மூலம் உரையாடி வருவதும் -

தமிழக ஆளுநர் மூலம் மாநில நிலைமை குறித்து மத்திய அரசு அவசர அறிக்கை கோரியிருப்பதும்-

ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசைக் கலைக்கும்படி பார (14ஆம் பக்கம் பார்க்க)



நீதிபதி வீட்டில் இருந்து வெளியே அழைத்து வரப்படும் கருணாநிதி.

## ஸ்டாலின் சரண்!

சென்னை,ஜூலை1

சென்னை மேயரும் கருணாநிதியின் மகனுமான மு.க.ஸ்டாலின் நேற்றுக் காலை 9.20 மணியளவில் சென்னை முதன்மை அமர்வு நீதிபதி அசோக்குமார் முன்னிலையில் சரணடைந்தார். அவரையும் 10ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

பின்னர் சென்னை மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஸ்டாலின் அங்கிருந்து மதுரைச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

தம்மைப் பொலீஸார் தேடுவது குறித்துக் கேள்விப்பட்டுத் தாம் நீதிபதி முன்னால சரணடைவதாக ஸ்டாலின் முன்னதாகச் செய்தியாளரிடம் கூறினார்.

"எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தில் சந்திக்கத் தயாராக உள்ளேன்"

"மூட்டு வலி, நெஞ்சு நோ என்று கூறி, நீதிமன்றத்துக்கு வராமல் விட்டு, தவணை போட்டு, நீதிமன்றைப் புறக்கணிக்கமாட்டேன். வழக்குளை நேரடியாகச் சந்திக் (14ஆம் பக்கம் பார்க்க)



சிறைவாசலில் மகளுடன் சத்தியாக்கிரகம் இருக்கும் கலைஞர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ஜூலை 5 கரும்புலிகள் தினத்தை ஒட்டி

# குடாநாட்டின் மீது மூன்று முனைகளில் தாக்குதல் நடத்தப் புலிகள் திட்டமாம்!

கொழும்பு,ஜூலை1

குடாநாடு மீது பெரும்எடுப்பிலான மும்முனைத் தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக அரச செய்தி ஊடகங்கள் நேற்று தகவல் வெளியிட்டிருக்கின்றன.

ஒவ்வொன்றும் 750 போராளிகளைக் கொண்ட புலிகளின் மூன்று தாக்குதல் அணிகள் இந்த மும்முனைத் தாக்குதல்களுக்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் -

முதலாவது அணி நாகர்கோயில் நோக்கியும் -

இரண்டாவது அணி நாவற்குழி நோக்கியும் -

முன்னேறத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் -

அரியாலைப் பிரதேசத்துக்குள் ஊடுருவுவதற்காகப் பூநகரியில் கடற் புலிகளை நிலைநிறுத்தும் திட்டமும் வகுக்கப்பட்டிருப்பதாகவும் -

அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதல்களை முறியடிக்கப் படையினர் ஆயத்த நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

எதிர்வரும் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் 'கரும் புலிகள்' தினத்தை ஒட்டியே பெரிய தாக்குதல்களைத் தொடுக்கப் புலிகள் ஆயத்தம் செய்து வ்ருவதாக புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள்காட்டி நேற்றைய 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் செய்தி வெளியாகி இருக்கிறது.

இந்தத் தாக்குதல்களுக்கான பாரியளவிலான ஏற்பாடுகளை மேற்கொண்டுவரும் புலிகள் வன்னியில் தனியாருக்குச் சொந்தமான வாகனங்களைப் பொறுப்பேற்று அவற்றின் உதவியுடன் போராளிகளையும், தளபாடங்களையும் நகர்த்தி வருவதாகவும் -

இந்த ஏற்பாடுகள் பற்றிய தகவல்கள் வெளியே கசிவதைத் தடுப்பதற்காகவே பிரமணாளங்குளம் ஊடான போக்குவரத்து வீதியை சில தினங்கள் புலிகள் மூடிவைத்திருந்ததாகவும்-

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரன் வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்குச் சென்று விசேட ஆராதனையில் ஈடுபட்டதாகவும் -

பாரிய தாக்குதல்களை நடத்துவதற்கு முன்னர் அவர் இப்படிச் செய்வது வழக்கமெனவும் -

வன்னியில் இருந்து வெளியே வந்த பொதுமக்கள் கூறியிருப்பதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நெடுங்கேணியில் ஷெல் தாக்குதல்; கோண்டாவில்வாசி உடல் சிதறிப் பலி

வவுனியா,ஜூலை1

நெடுங்கேணிப்பகுதி குடிமனைகள் மீது நேற்றுமுன்தினம் காலை நடத்தப்பட்ட தொடர்ச்சியான ஷெல் வீச்சில் ஏழு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

யாழ்ப்பாணம் - கோண்டாவிலில் இருந்து இடம்பெயர்ந்து 17ஆம் கட்டை, நெடுங்கேணியில் வசித்து வந்த இராசையா சீனிவாசகம் (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதலின் போது வீடு ஒன்றும் பலத்த சேதத்துக்கு உள்ளானது.

(க-7-4)


## பலதரப்பட்ட தரமான கணனிகள்



Pentium III - 733, 800Mhz
Cyrex 333 MHz

DELVON INTER PENTIUM - IV

RS. 55,000/= UP WARDS

Computer,
Computer Accessories
Printers, Cartridges, U.P.S.,
Floppy Disketts, Monitor, etc.

ஒரு சில தினங்கள் மட்டும்
யாரும் எதிர்பாராத மலிவு விலையில்

Sri Murugan Computer Systems
Dealers For:- DELVON COMPUTERS
303, K.K.S. Road, Jaffna.

T.P : 021 - 2670, 021-3588
Fax : 021 - 3214 e.mail:-del-smskr@eureka.lk

(C/17267)


# தேசிய அரசு அமைப்பதன் மூலமே நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கலாம்

## வர்த்தக, கைத்தொழில் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு,ஜூலை1

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய நெருக்கடிகளிலிருந்து நாட்டைக் காப்பாற்றச் சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை நிறுவ வேண்டும்.

இவ்வாறு இலங்கை வர்த்தக, கைத்தொழில், வணிகப் பேரவையின் தொழிலதிபர் அமைப்புக்கள் மற்றும் வர்த்தக சங்கங்களின் கூட்டு ஒன்றியம், ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று நாட்டின் அபிவிருத்தி என்பதற்குத் துளியும் இடமில்லாத வகையில், பாதுகாப்புச் செலவினமும், எரிபொருள் விலையும் அதிகரித்துள்ளன.

வாழ்க்கைச் செலவு உயர்வும், கொலை, கொள்ளை உட்பட சட்ட விரோதச் செயல்கள் அதிகரிப்பும் சமூகத்தின் ஸ்திரநிலையை சீர்குலைத்து வருகின்றன.

இதேநிலை தொடர்ந்தால், நாட்டில் அராஜகம் ஏற்படுவது சர்வ நிச்சயம்.

இலங்கையின் ஸ்திர நிலைமை, சமூகப் பொருளாதார அபிவிருத்தி நலன்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே இந்த நேர்மையான அவசர விண்ணப்பத்தை தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும், அரசியல் அமைப்புக்களின் தலைவர்களும் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் தமது வேற்றுமைகளை மறந்து தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அரசொன்றை அமைத்து ஐக்கிய இலங்கையை உறுதிப்படுத்தல் வேண்டும்.

இலங்கைக் குடிமக்களின் தற்போதைய மற்றும் எதிர்காலச் சந்ததிகளுக்கு அரசியல் தலைவர்கள் ஆற்ற வேண்டிய கடப்பாடும், அவசரத் தேவையும் இதுவாகும்.

இலங்கைப் பொதுமக்கள் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்வார்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

இந்த விடயம் குறித்துத் தங்களுடன் மேலும் கலந்துரையாடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு வர்த்தக, கைத்தொழில் துறைகள் தொடர்பான அமைப்புக்களின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பிய கடிதங்களில் தெரிவித்துள்ளது. (ஒ)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

*அன்புச் சர்மி.*
*அன்பிலும், பண்பிலும்*
*உயர்ந்து நின்ற உன்னை*
*எப்போதும் போலவே*
*நேசிக்கின்றோம். உன்னை*
*இழந்த சோகத்தை*
*சுமந்து நிற்கின்றோம்.*
*நீ எம்முடன் வாழ்ந்த*
*நாள்கள் கொஞ்சம்*
*ஆயினும் உனது*
*நினைவுகள் என்றும் எம்*
*நினைவை விட்டு*
*அகலாது.*



### திருமதி ப.சர்மினி

தோற்றம் 23.02.1978 — மறைவு 17.05.2001

*கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

(C/17271)

*குடும்பத்தினர், நண்பர்கள்.*


"கர கர மொரு மொரு"
சன்விட்டா பிஸ்கட்டுக்களை
தனிச் சிறப்புடன் சுவைத்து மகிழுங்கள்
*தயாரிப்பாளர்கள்:-*
வெஸ்ரோரியன்ட் பூட்ஸ் (பிறைவேற்) லிமிட்டட் - கொழும்பு.
*சந்தைப்படுத்துவோர்:-*
சிவா நறுமணப் பூங்கா
(89645) 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல. 2567


## பலாலி ஆசிரிய கலாசாலை

### தற்காலிக இணைப்பு விரிவுரையாளர் பதவி வெற்றிடத்துக்கு உடனடியாக ஆள் சேர்த்தல்

கீழ்வரும் தகைமையுடைய அரச பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவாகும் விரிவுரையாளர் வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்வி அமைச்சின் விடுவிப்பு பெற்றுக்கொண்டதன் பின்னர் இணைத்துக் கொள்ளப்படுவர். ஆர்வமுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரங்களுடன் நாளை (02.07.2001) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு நேரில் வருகை தரவும்.

குறைந்தது 07 வருட ஆசிரிய அனுபவம், துறைசார்ந்த பட்டப்படிப்புடன் கலவி டிப்ளோமா மற்றும் தொழில்சார் அனுபவம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| தொழில்சார் | - | 02 பேர் |
| கணிதம் | - | 01 |
| விவசாயம் | - | 01 |
| வர்த்தகம் | - | 01 - கணக்கியல், வர்த்தகம் தகைமையுடையோர் |
| உடற்கல்வி | - | 01 - ஆங்கில மொழியில் கற்பிக்கக் கூடியவர் |

அதிபர்,
*ஆசிரிய கலாசாலை,*
*பலாலி.*

(C/17270)

## மரண அறிவித்தல்

### திருமதி எதிர்வீரசிங்கம் சிவகாமசுந்தரி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொற்கொடி தம்பதிகளின் மூத்த மகன் காலஞ்சென்ற எதிர்வீரசிங்கம் (விவசாய போதனாசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவி சிவகாமசுந்தரி (வட்டுக்கோட்டை மாதர் சங்க முன்னாள் தலைவி) 27.06.2001 புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுட்டத்தரணி நாகலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மகளும் மகேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், ஞானசம்பந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயசுந்தரி, ஜெயவீரசிங்கம் (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்), ஜெயரத்தினசிங்கம் (தும்பநெனியா பண்ணை அதிபர்), ஜெயராணி (ஜேர்மனி), ஜெயக்குமார், ஜெயசஸ்வரி (போறூட்), காலஞ்சென்ற ஜெயசூரி, ஜெயகுமாரி, ஜெயநேசன் (கனடா), ஜெயசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பண்ணை அதிபர் தனபதி, புஸ்பவதி, வரதலட்சுமி, குணரத்தினம், அன்னலட்சுமி, டொனேசன் (பிரபல வர்த்தகர், முருங்கன்), மனோரஞ்சிதமலர், ஜீவராசா, மைதிலி, சிவராஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சினி, தனுசா, தாரணி, தபோதினி, புஸ்பராஜன், கிருஸ்ணா, சாருகாசினி, கௌரிப்பிரியன், மதுரா, டிசோன், திருமதி கவிதா ஜெயசீலன், ஜெயந்தன், சுரேந்தன், நிகேதன், திவாகரன், டிலோசினி, கிசோன், நிஷாயினி, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை வவுனியாவில் க.டொனேசன் தம்பதிகளின் இல்லத்தில் (T.P.No:- 024-23635) நாளை (02.07.2001) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தெட்சணாங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத்தருகின்றோம்.

*துக்கம் கொண்டாடும் இடம்:-* அன்னாரின் சம்பந்தி செ.பாலசுப்பிரமணியம் அவர்களின் இல்லத்தில் *(மயில உடையார்வளவு, வட்டுக்கோட்டை பழைய வீதி)*

தகவல்:
க.சத்தியசீலன் (மருமகன்), செ.பாலசுப்பிரமணியம்.

(C/17269)

# கருணாநிதியின் கைதையடுத்து தமிழ்நாட்டில் வன்முறைகள்!

## ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிப்பு!!



சென்னை,ஜூலை1

**தமிழக முன்னாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.கருணாநிதி நேற்று அதிகாலை, அவரது வீட்டிலிருந்து தமிழகப் பொலீஸின் குற்றப் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டதையடுத்து, தி.மு.க. ஆதரவாளர்கள் தமிழகத்திலும், பாண்டிச்சேரியிலும் வன்முறை ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர்.**

நேற்றுக் காலை முதல் கருணாநிதி கைது செய்யப்பட்ட செய்தி, வேகமாகத் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் பரவியது. இதனைத் தொடர்ந்து நகரங்களின் வீதிகளில் கும்பல், கும்பலாகத் திரண்ட திமு.க.ஆதரவாளர்கள், அரச பஸ்கள் மீது கல்லெறி மற்றும் தீ வைப்புகளில் ஈடுபட்டனர். கடைகளை அடைக்கும் படியும் அவர்கள் வற்புறுத்தினர்.

இதனையடுத்து நேற்றுக் காலை முதல் தமிழகத்தின் பிரதான நகரங்களிலும், பாண்டிச்சேரியிலும் வாகனங்கள் எதுவும் வீதிகளில் ஓடவில்லை; கடைகள் திறக்கப்படவில்லை. பல இடங்களில் தி.மு.க. தொண்டர்கள் முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவிகளைக் கொளுத்தினார்கள்.

தி.மு.க.வினரின் ஆர்ப்பாட்டங்கள் தொடரும் அதே சமயம், அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை தமிழகப் பொலீஸார் ஆரம்பித்துள்ளனர்.

தி.மு.கவின் முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தி.மு.கவினரை கைது செய்து, திருமண மண்டபங்களிலும், பொதுக் கட்டடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஒ)

## மேயர் மு.க.ஸ்டாலின் சரண்!



சென்னை மாநகராட்சி மேயரும், தி.மு.க.தலைவர் கருணாநிதியின் மகனுமான மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை முதன்மை அமர்வு நீதிபதியின் வீட்டுக்குச் சென்று சரணடைந்தார்.

பெங்களூரில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த ஸ்டாலின் தனது பெங்களூர் நிகழ்ச்சிகளை உடனே கைவிட்டு விட்டு, நேற்று சென்னை திரும்பிச் சரணடைந்தார். அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிபதி உததரவிட்டார்.

## மதுரையில் அழகிரி கைது!

தி.மு.க.தலைவர் கருணாநிதியின் மகனும், மதுரையில் தி.மு.கவின் முககிய பிரமுகராகக் கருதப்பட்டவருமான மு.க.அழகிரியும் நேற்றுத் தமிழகப் பொலீஸாரால் கைதுசெயயப்பட்டார்.

இவர் கைது செய்யப்பட்ட சிறிது நேரத்தில் மதுரை மாநகராட்சி மேயர் எம்.குழந்தைவேலுவும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் உடனடியாகப் பொலீஸ் தரப்பால் வெளியிடப்படவில்லை.

மு.க.அழகிரி கைது செய்யப்பட்டதை அடுத்து மதுரையில் அவரது ஆதரவாளர்கள் பெரும் வன்முறைகளில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## முரசொலிமாறன் மருத்துவமனையில்



கருணாநிதி கைது செய்யப்பட்டபோது, ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து பொலீஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மத்திய தொழிற்றுறை அமைச்சரும், கருணாநிதியின் மருமகனுமான முரசொலிமாறன் சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கைது சம்பவத்தின் போது நிகழ்ந்த கைகலப்பில் தி.மு.கவின் மத்திய அமைச்சர் ரி.ஆர். பாலுவும் காயமடைந்தார்.

## நீதிமன்ற ஆணை உதாசீனம்

முன்னாள் முதல்வர் கருணாநிதி, முன்னாள் தமிழக அரசின் தலைமைச் செயலர் கே.நம்பியார் மற்றும் முன்னாள் தி.மு.க.அமைச்சர் கோ.சி.மணி ஆகியோர் நேற்றுக் கைது செய்யப்பட்டு முதன்மை அமர்வு நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அதேசமயம் கருணாநிதியின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு, அவரைச் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கும்படியும் நீதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

ஆனால் பொலீஸார் கருணாநிதியை மருத்துவமனையில் அனுமதிக்காமல் நேரடியாகச் சென்னை மத்திய சிறைச்சாலைக்கு கொண்டு சென்றனர்.

## கூறப்படும் குற்றச்சாட்டுகள்

சென்னை நகரில் வாகன நெரிசல்கள் மிகுந்த பிரதான சாலைகளின் சந்திப்புகளில் 1999 ஆம் ஆண்டு 12 கோடியே 10 இலட்சம் ரூபா செலவில் மேம்பாலங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டது.

இதன்படி பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் மேம்பாலங்களைக் கட்டும் பணிகள், பல தனியார் நிறுவனங்களுக்கு சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டது.

இதற்கான நிதியை சென்னை மாநகராட்சிக்கு தமிழக அரசு வழங்கியிருந்தது.

இந்த நிலையில், மேம்பாலங்கள் கட்டும் பணிகளில் முறைகேடுகளும், ஊழலும் இடம்பெற்றதாகவும், அதற்கு கருணாநிதி, மு.க.ஸ்டாலின் உட்பட சிலரே காரணம் என்றும் குற்றஞ்சாட்டியே தற்போது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## நூறுக்குமதிகமான செய்தியாளர் தமிழகப் பொலீஸாரால் கைது!

சென்னை, ஜூலை1

தமிழகத்தில் 30 பெண்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான செய்தியாளர்களை நேற்று முன்தினம் பொலீஸார் கைது செய்த பின்னர் விடுவித்தனர்.

விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் பொன்முடி அரசு களஞ்சியத்தில் திடீர் சோதனை நடத்தியபோது, அவருடன் உடன் சென்று செய்தி சேகரித்த 'சன்' தொலைக்காட்சி செய்தியாளர் கைது செய்யப்பட்டதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் நடத்த முயன்றபோதே செய்தியாளர்களைப் பொலீஸார் கைது செய்தனர்.

சென்னையில் உள்ள அரசினர் விருந்தினர் மாளிகை முன்பாக ஊர்வலம் நடத்துவதற்காக செய்தியாளர்கள் திரண்டிருந்தபோதே பொலீஸார் செய்தியாளர்களைக் கைது செய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கைதான செய்தியாளர்கள் அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

### 2005 ஆம் வருடம் இளம் பிள்ளைவாதம் முற்றாக ஒழிப்பு

2005ஆம் ஆண்டளவில் உலகிலிருந்து இளம்பிள்ளைவாதம் நோயை முற்றாக இல்லாது ஒழித்து விடலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

ஆனால் இந்த இலக்கை அடைவதற்கு நூறு கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்றும் -

உலகின் மேற்கு நாடுகளில் முற்றாக ஒழிக்கப்பட்ட இளம்பிள்ளைவாதம் இந்தியா, நைஜீரியா உட்பட 20 நாடுகளில் தற்போது தொடர்ந்தும் காணப்படுவதாகவும்-

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

### இந்தியா, பாகிஸ்தான் மீதான தடை குறித்து அமெரிக்கா கருத்து

வாஷிங்ரன்,ஜூலை1

இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றின் மீதான தடைகளை அகற்றுவதை சமமான அடிப்படையில் பரிசீலிக்க முடியாது என்று அமெரிக்கா தெளிவுபடுத்தியுள்ளது.

அணு ஆயுதம் சம்பந்தப்பட்ட தடைகளோடு இராணுவப் புரட்சிககாக விதிக்கப்பட்ட தடைகளையும் பாகிஸ்தான் எதிர்கொள்வதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சகம் கூறியுள்ளது. (ஒ)

### உலக அரங்கில்

### கியூபாவின் அடுத்த அதிபர்?

ஹவானா,ஜூலை1

கியூபாவின் தலைவராக தமது சகோதரர் ரவூப் காஸ்ட்ரோ வருவதற்குச் சாத்தியம் இருப்பதாக கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோ கூறியுள்ளார்.

ரவூப் காஸ்ரோவுக்கு அதிபர் பதவிக்குத் தேவையான அனுபவமும், அதிகார பலமும் இருப்பதாக பிடல் காஸ்ட்ரோ தெரிவித்தார். இதனையடுத்து, பிடல் காஸ்ட்ரோவுக்குப் பின்னர் கியூபாவின் அதிபர் பதவிக்கு வருபவர் குறித்த சர்ச்சை பெரும்பாலும் முடிவடைந்ததாகக் கருதப்படுகிறது.

### நேபாள மன்னர் வலியுறுத்தல்

காத்மண்டு,ஜூலை1

நேபாளத்தில் ஜனநாயகத்தை மேம்படுத்தத் தான் உறுதி பூண்டுள்ளதாகவும் - மாவோ கிளர்ச்சியாளர்கள் வன்முறைகளைக் கைவிட்டு தேசிய நிர்மாணத்துக்கு ஒத்துழைப்புத்தர வேண்டும் என்றும் -

நேபாளத்தின் புதிய மன்னர் ஜியானேந்திரா நேற்று முன்தினம் நேபாள நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது வலியுறுத்தினார். (ஒ)

### பிரிட்டனில் 90 வீத சிறுவரிடம் 'செலுலார்'

லண்டன்,ஜூலை1

பிரிட்டனில் 90 சதவீதமான சிறுவரிடம் சொந்தமாக 'செலுலார்' தொலைபேசிகள் இருப்பதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இவர்கள் அனைவரும் 16வயதுக் குட்பட்டவர்கள் என்றும் -

இவர்களில் 10 சதவீதமானவர்கள், தினசரி 45 நிமிடங்களுக்கு குறையாமல் 'செலுலார்' தொலைபேசியில் பேசுவதாகவும் -

5 சதவீதத்தினர் ஒரு மணித்தியாலத்துக்கும் அதிகமாகப் பேசுவதாகவும் தெரியவந்துள்ளது. (ஒ)

## யூகோஸ்லாவியப் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்

பெல்கிரேட்,ஜூலை1

யூகோஸ்லாவியாவில் ஷோரன் ஸூகப் பிரதமர் பதவியிலிருந்து நேற்று முன்தினம் விலகினார்.

யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் சொலோபொடான் மிலோசெவிக்கின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அல்பேனியர்களுக்கு எதிரான இன ஒழிப்பு நடவடிக்கை தொடர்பாக விசாரணை நடத்திவரும் சர்வதேச விசாரணைமன்றத்திடம், தன்னை ஒபடைக்க யூகோஸ்லாவிய அரசு இணங்கியுள்ளதாலேயே தான் பதவி விலக நேர்ந்ததாக ஸூகப் தெரிவித்தார்.

விசாரணை மன்றத்துக்கு தான் ஒத்துழைப்புக்கொடுக்க இருப்பதால், கூட்டணி அரசின் ஒற்றுமை பாதிக்கப்படக்கூடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

முன்னாள் அதிபர் மிலோசெவிக்குடன் இணைந்து கடந்த வருடம் ஒக்டோபர் மாதம்வரை செயற்பட்ட ஸூகப், மிலோசெவிக் பதவியகன்ற பின்னர், கூட்டரசு ஒன்றை உருவாக்கியிருந்தார். (ஒ-4)

## ஆற்றில் 'டிரக்' கவிழ்ந்ததில் பீஹாரில் 20 தொழிலாளர் பலி!

பாட்னா,ஜூலை1

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் பெரியோன் தொனியின் காங் நதியில் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த 'டிரக்' வண்டி ஒன்று நேற்று கவிழ்ந்ததில் 20 பேர் நீரில் மூழ்கி மூச்சுத் திணறி இறந்தனர்.

ஆற்றில் கவிழ்ந்த 'டிரக்' வண்டியல் தொழிலாளர்கள் பயணம் செய்ததாகவும் -

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளும் பெண்களும் ஆவார்கள் என்றும் -

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளி மாநிலங்களுக்கு வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த 53 பேர் 'டிரக்' வண்டியில் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. 33 தொழிலாளர்கள் நீந்தி உயிர்தப்பினர். இதுவரை 13 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.



**தாம் அரசியலில் ஈடுபடுவதற்கு கட்சிகள் உதவவேண்டும் என்பது உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் புதுடில்லியில் சமீபத்தில் அலிகள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினார்கள். இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் வந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான அலிகள் கலந்துகொண்ட பேரணியில் ஒரு காட்சி இது.**

## இறந்த பின்னரும் உணர்வுண்டு; பிரிட்டிஷ் விஞ்ஞானி கண்டுபிடிப்பு

நோயாளி ஒருவர் மருத்துவ ரீதியாக மரணமடைந்து, அவரது மூளை செயற்படுவது நின்று போனாலும், அவருக்குத் தொடர்ந்தும் உணர்வுகள் இருந்து வரும் என்று, பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் கூறியிருக்கிறார்.

இதயக் கோளாறினால் பாதிக்கப்படுபவர்கள் பற்றி இந்த விஞ்ஞானி ஆராய்ந்துள்ளார்.

இருதயக் கோளாறால் பாதிக்கப்பட்ட 63 பேரை ஆய்வுக்குட்படுத்திய இவர், அவர்கள் இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியபோதும், மீண்டும் உயிர்பெற்று, தமது அனுபவங்களை தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

மரணமடைந்தாலும், உணர்வு இருந்து கொண்டே இருக்கும் என்று மருத்துவரீதியில் ஆராய்ந்த இந்த விஞ்ஞானி கடந்த வாரம் கலிபோர்னியா தொழில் நுட்ப நிறுவனத்தில் தனது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்திருந்தார்.

இந்த விஞ்ஞானியின் ஆய்வுக் கட்டுரை வெளியாகியதையடுத்து -

மரணத்தின் பின்னர் வாழ்வு இருக்கிறதா என்பது பற்றியும் -

மானுட ஆன்மா என்ற ஒன்று குறித்தும் -

பல நூறு ஆண்டுகளாக தொடரும் விவாதம் மீண்டும் தலை தூக்கியுள்ளது. (ஒ-4)

## அமெரிக்காவில் சீட்டிழுப்பில் வர்த்தகருக்கு 14 கோடி டொலர்

வாஷிங்ரன்,ஜூலை1

அமெரிக்காவில் பலசரக்குக் கடை நடத்தி வந்த ஒருவருக்கு 14 கோடியே 10 லட்சம் அமெரிக்க டொலர்களை அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வென்றுள்ளார்.

சான்ஜோஸ் பகுதியைச் சேர்ந்த கெய்ரோ காட்சி லானோ என்ற வியாபாரிக்கே அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் இப்பெருந்தொகை பரிசாகக் கிடைத்துள்ளது.

இவர் இந்த அதிர்ஷ்டலாபச் சீட்டை கணனி மூலம் தெரிவு செய்து வாங்கியதாகவும் -

கடந்தவாரம் நடந்த சீட்டிழுப்பில், இந்த வர்த்தகர் வாங்கிய சீட்டுக்குப் பரிசு கிடைத்ததாகவும் - கூறப்படுகிறது. (ஒ)

# காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட மேலும் 29 பேரின் உறவினர்களை அது சம்பந்தமான விசாரணைகளுக்காக யாழ் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

காணாமற் போனவர்களின் பெயர் விவரங்கள் மற்றும் விசாரணைக்கோவை இலக்கங்கள் முகவரிகள் என்பன வருமாறு:-

★ சரவணை ரேவதி (கோவை இல—பி-1/220), வரணி மேற்கு.

★ எஸ். தயாபரன் (கோவை. இல—பி-1/317) ஊர்காவற்றுறை.

★ சபாரத்தினம் சந்திரகுமார் (கோவை. இல— பி-1/480) குமரகோட்டம், கோண்டாவில்.

★ மருசலீன் தினேஸ் வலன்ரைன்(கோவை. இல— பி-1/428) உரும்பிராய் கிழக்கு.

★ அருளானந்தம் கெங்காதரன் (கோவை. இல— பி-1/461) அரசடி, கோப்பாய் தெற்கு.

★ இராஜரட்ணம் சிறீதரன் (கோவை. இல— பி-1/460) டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

★ நவரட்ணம் யோகேஸ்வரன் (கோவை. இல— பி-1/408) நவாலி தெற்கு.

★ மார்க்கண்டு விஜயகுமார் (கோவை இல — பி-1/410) சிவன்கோவிலடி, சங்கானை மேற்கு.

★ பாலரத்தினம் ஜெயமோகன் (கோவை இல — பி-1/130) இல. 183, ஜும்மா வீதி, மானிப்பாய்.

★ இராசையா பாலசுப்பிரமணியம் (கோவை இல — பி-1/181) சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

★ குமரன் கமலேஸ்வரன் (கோவை இல — பி - 1/444) வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

★ நமசிவாயம் கமலதீஸ்வரன் (கோவை இல — பி - 1/113) வள்ளியம்மன் கோவிலடி, அரியாலை, கிழக்கு.

★ துரைசிங்கம் தேவிராஜா (கோவை இல — பி - 1/390) பழைய பொலீஸ் நிலைய வீதி, ஆனைக்கோட்டை.

★ கணேஸ் கருணாகரன் (கோவை இல — பி - 1/399) மூளாய்.

★ பாலன் சிவராஜ் (கோவை இல — பி - 1/475) மட்டுவில் கிழக்கு.

★ கந்தசாமி செந்தீபன் (கோவை இல — பி - 1/114) மிருசுவில் கிழக்கு.

★ சொலமன் அருள்நேசன் (கோவை இல — பி - 1/44) தேவதாசிகுளம், மிருசுவில்.

★ வேலு வசந்தன் (கோவை இல— பி - 1/353) எழுதுமட்டுவாழ் தெற்கு.

★ நிர்மலா தர்மபாலன் (கோவை இல—பி - 1/387) சாவகச்சேரி.

★ இராசு விஜிதரன் (கோவை இல—பி - 1/366) எழுதுமட்டுவாழ் தெற்கு.

★ செபமாலை வில்சன் கோவை இல— பி - 1/371) மிருசுவில் தெற்கு.

★ தங்கவேலு சந்திரகுமார் (கோவை இல— பி-1/468) தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

★ செல்லையா பாலசிங்கம்(கோவை இல—பி-1/440) கைதடி நுணாவில், சாவகச்சேரி.

★ இரத்தினம் தேவராசா (கோவை இல—பி - 1/438) கைதடி நுணாவில்.

★ அருளானந்தம் சிவகுமார் (கோவை இல— பி - 1/466) நாகர்கோயில் கிழக்கு.

★ பி. கணேசலிங்கம் (கோவை இல—பி - 1/241 மீசாலை கிழக்கு.

★ இளையதம்பி கேசவன் (கோவை இல—பி - 1/277) மீசாலை தெற்கு.

★ எஸ், குமார் (கோவை இல — பி- 1/363) மீசாலை வடக்கு, மீசாலை,

★ பூபாலசிங்கம் குமார் (கோவை இல— பி- 1/359) மட்டுவில், சாவகச்சேரி.

மேற்படி 29 பேரும் காணாமற் போனமை தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள், பெற்றோர், உறவினர்கள் ஆகியோர் காணாமல் போனோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளுக்கு யாழ். பொலீஸ் நிலையத்துக்கு சமுகமளித்து சாட்சியமளிப்பதன் மூலம் விசாரணைக்கு உதவுமாறு குற்றப் புலனாய்வுப் பொலீஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஒ-6)

## காங்கேசன்-பருத்தித்துறை சேவைக்கான லொறிக் கூலியை வழங்குமாறு உரிமையாளர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 1

காங்கேசன்துறை, மற்றும் பருத்தித்துறையில் இருந்து பொருள்களை ஏற்றி இறக்கியமைக்கான லொறிக் கூலிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

மேற்படி சங்கத்தின் 51 அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு இந்த மகஜரைக் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதிக்கான பொருள்களை ஏற்றி இறக்கியமைக்கான 54 நாள்களுக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் நாம் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளோம்.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் எமது சங்கத் தலைவரிடம் முறையிட்டிருந்தோம். ஆனால் சங்கத்தலைவர் அதற்குப் பதிலாக இரண்டு அங்கத்தவர்களின் லொறிகளை சேவையில் இருந்து இடை நிறுத்தியுள்ளார். இது குறித்து நிர்வாக சபைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படவில்லை.

எனவே இவை சம்பந்தமாக நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் —இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## சுதேச மருத்துவத்துக்கான மூலப் பொருள்கள் தட்டுப்பாடு

### எடுத்துவர உதவுமாறு கோரிக்கை

அச்சுவேலி, ஜூலை 1

சுதேச மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்,

வடக்கு—கிழக்கு மாகாண முன்னாள் சுதேச வைத்தியத் துறை ஆணையாளர் வைத்திய கலாநிதி ப. பூரண உரோமகேஸ்வரன் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு கோரியுள்ளார்,

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் ஆயுர்வேத சித்தமருத்துவ வைத்தியர்கள் உரியமுறையில் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

'அபின்' 'கஞ்சா' உள்ளிட்ட மூலப்பொருள்கள் சுதேச வைத்திய மருந்துகளைத் தயாரிப்பதற்கு மிக அவசியமானவை. அவற்றைச் சுதேச வைத்தியர்களுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

சுதேச வைத்திய மருந்து வகைகளைச் சேர்ந்த லேகியங்கள், பஸ்பங்கள், சூறணங்கள் பல கடந்த காலங்களில் இந்தியாவில் இருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் கொள்வனவு செய்யப்பட்டன.

சுதேச மருந்துப் பொருள்களுக்கான மூலப் பொருள்கள் எடுத்து வரப்படாமையால்குடாநாட்டின் சுதேச மருத்துவத்துறை முற்றாக முடக்கப்பட்டுள்ளது— என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-11)

## கழிவு நீர் தேக்கம்

யாழ். நகரப் பகுதியில் உள்ள கழிவு வாய்க்கால்களில்கழிவுநீர் தேங்கி நிற்பதால் நகரப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

ஆஸ்பத்திரி வீதி, மற்றும் கஸ்தூரியார் வீதியில் உள்ள வடிகால்கள் புனரமைக்கப்பட்டு வருவதால் ஆங்காங்கே தேங்கி நிற்கும் கழிவு நீர் அப்புறப்படுத்தப்படாமல் உள்ளது.

இவ்வாறு தேங்கி நிற்கும் கழிவு நீரில் இருந்து நுளம்பு மற்றும் இலையான்கள் பெருகி வருவதுடன் வீதியால் பொதுமக்கள் செல்ல முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுவதையும் அவதானிக்க முடிந்தது, (உ-6)

# உதவும் கரங்கள் பலமடையட்டும்!

''எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமே உள்ளன. நாங்கள் போய் இத்தனை பேருக்கும் உணவு வாங்கி வந்தால்தான் முடியும்'' (லூக். 9:12-13) உள்ளதைப் பகிர உங்கள் உள்ளங்கள் தயாரா? அறிவை, ஆன்மீகத்தை, அன்புச் செயல்களை பகிர்வதில் எம்மிடம் என்ன மனநிலை உண்டு? எல்லாமே எமக்கு யாரும் உதவ வேண்டும், எமக்கு அந்த உறவாடல்களால் என்ன நன்மை உண்டு? என தம்மிடம் இருப்பதை மறந்து மற்றவர்களிடமே அதிகம் எதிர்பார்த்திருக்கும் சுயநலத் தாகத்தால் இருந்தும் இல்லாமை எனும் ஏக்கத்துடன் திருப்தியற்ற வாழ்வுக்குள் மூழ்குவதால் மனமே பாலை

**யோசப்பாலா**

வனமாகி வரட்சி காண்கிறது.

''இவ்விடம் பாலை நிலமாயிற்றே; சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும், பட்டிகளுக்கும் சென்று தங்கவும், உணவு வாங்கிக் கொள்ளவும் மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும்;'' என்றனர் இயேசு அவர்களிடம் ''நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்'' என்றார்-

எம்மிடம் இருப்பதை நாம் அறியாமல் இருப்பதாலும் பதுக்கி வைப்பதாலும், பகிர மனமில்லாததாலும், மறுப்பதாலும் அயலில் தண்டிக் கொடுப்பதைச் சுரண்ட முன்நிற்கும் பெருச்சாளிகளாக முண்டியடிக்கும் மனநிலைகள் அன்று மட்டுமல்ல இன்றும் எம் மத்தியில் உலாவருவதை நாம் காண்கிறோம்.

உண்மையில் உதவும் கரங்கள் ஊமையாக மௌனித்து வலதுகை கொடுப்பது இடதுகைக்குத் தெரியாது இருக்க வாங்கிக் கொடுப்பதில் பெருமை கொள்ளவும், அதற்காகப்பிரசாரப்படுத்த முனைவதும், தம்மைப் பாராட்ட

**ஞாயிறு நற்பிரசாதம்**

வேண்டும். என எதிர்பார்ப்பதும், தண்டிக் கொடுப்பதாக சுரண்டிக் கொள்வதிலும் தான்கூலிக்குமாரடிக்கும்படு சுட்டிகளாக இருந்து பாராட்டுக்களை எதிர்பார்க்கும்கூட்டமாககொடுப்பதிலும் கஞ்சல்தனம், கொடுக்க கொடுத்ததிலும் சுரண்டல்; தமக்கு என்றால் அகப்பையால் அள்ளிக் கொள்வோர், பிறருக்குச் சேர வேண்டியவற்றை தேக்கரண்டியால் அளவிடுவதில். வேலியே பயிரை மேயும் சுரண்டல், பொதுச் சேவையில் சுயநலம் கொண்டோர் மத்தியில் இன்றும் இறைவார்த்தைகள் அர்த்தமூட்டுகிறது.

இருப்பதைப் பகிருங்கள், எமது பங்களிப்பில் சுரண்டல் சுயநலம் வேண்டாம் ''நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்'' என்றார் இயேசு. சிலர் சிறிதாகக் கொடுத்தாலும் பெரிதாக விளம்பரப்படுத்திக்கொண்டு பிரசாரப்படுத்துவதில்திருப்தி காண்கிறார்கள். ஆனால் மறைவாகத் தமக்குள்ளே தர்மம் செய்யும் பெருந்தகையாளர்களும் எம் மத்தியில் இருக்கவே இருக்கிறார்கள். எதுவித தம்பட்டமும் இன்றி சேவையும், பகிர்வும், ஆன்மீக வாஞ்சையுடன், இருப்பதைப் பகிர்வதில் இன்பம் காண்போர், இறைவனின் சீடத்துவத்தின் சாட்சிகளாகின்றனர்.

பிறருக்கு கொடுத்து அவர்கள் உயர்வில், மகிழ்வில் இன்பம் காண்போர் இறை உறவைப் பகிரும் உண்மைச் சீடர்களே. இவர்கள் வறுமையிலும் பெருமையான செயல்களால் இறை உறவை வளர்த்து வார்த்தையாலும், வாழ்வாலும் வழிபாட்டை வாழ்வாக்கி வரும் சாட்சிகளே.

மனமிருந்தால் இடமுண்டு, மனித உறவுகள் பலமடைய மனித மாண்பு மகிழ்வடைய உறவுப்பகிர்வுகள், விருந்தோம்பல்கள், உயர்வு தாழ்வு இன்றிய விருந்தின் மூலம் இறைவன் தந்த திரு விருந்துகள் இறைசந்நிதியில் மட்டும் பகிரப்படுவதோடு நின்றுவிடாது வாழ்வியலுடன் சங்கமிக்க வேண்டும்.

தேவை உணர்ந்து சேவை ஆற்றும் ஆற்றல், திறமை, அன்புப் பகிர்வுகளை, கூலிக்கு மாரடிக்கும் சுய நல சேவைக்குள் சுரண்ட முனையாது, அன்புக்கு, தியாக வாழ்வுக்கு இறை உறவின் அர்ப்பணத்தை அர்த்தமுள்ளதாக்கி சேவைக்கு முன் வாருங்கள். பகிர்வதில் கஞ்சத்தனம் வேண்டாம். இலவசமாகப் பெற்றதை இலவசமாகவே கொடுங்கள்.

'கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.'

(லூக்.6:38)

## 15-வது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 23 — 10 — 1926

விண்ணில்: 01 — 07 — 1986

### அமரர் சின்னையா அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்)

அழகேயெம் ரத்தினமே ஆண்டுகள் மூவைந்து<br>
அழகற்று அகன்ற தையா அவனியிலே!<br>
அழகான அன்பான உம்சொற்கள் மறப்போமா?<br>
அழகொளிரும் உம்தோற்றம் அண்ணலே<br>
மறப்போமா?<br>
அழகாக எம்மைப் புரந்த எம் தலைவா!<br>
அழகே அமுதே எம்மிடத்தே வந்திடுவாய்!

மனைவி, மைந்தர்கள்.

சுதுமலை தெற்கு,<br>
மானிப்பாய்.

(89464)

## உதயன்

### மிதிவெடி விடயத்தில் மிகக் கவனம் தேவை

மிதிவெடி தொடர்பாக இவ்வாரம் வெளியான இரண்டு செய்திகள் கவனத்தை ஈர்ப்பனவாக உள்ளன.

மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளில் படையினரால் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டு பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், அப்பகுதிகளில் இன்னமும் மிதிவெடிகள், பொறிவெடிகளின் அபாயம் பெருமளவில் இருப்பதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படும் முறைப்பாடு - முதலாது செய்தி.

தென்மராட்சிப் பகுதியில் சுயாதீனமான ஓர் அமைப்பின் மூலம் மிதிவெடிகள் அகற்றப்படும்வரை அங்கு மக்களை மீளக் குடியமர அனுமதிக்கக் கூடாது என்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் என். சிவராஜா விடுத்திருக்கும் கோரிக்கை - இரண்டாவது செய்தியாகும்.

இது தொடர்பாக டாக்டர் சிவராஜா எழுப்பியிருக்கும் அபாய மணியும் சமுதாயப் பெரியோர்களால் அவசரமாக - அவசியமாக - கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

தென்மராட்சியில் மிதிவெடிகள் அகற்றப்படாமலேயே மக்கள் அங்கு சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு மிதிவெடியில் சிக்கிக் காயமடைவோர் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்தினரைப் பொறுத்தவரை முக்கிய வீதிகளில் - ஒழுங்கைகளில் - பொது இடங்களில் - உள்ள மிதிவெடிகளை மட்டுமே அவர்களால் அகற்ற முடியும். மக்களின் இருப்பிடங்களில் உள்ள மிதிவெடிகள் அவர்களால் அகற்றப்படுவது குறைவு என்ற யதார்த்தத்தையும் அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஐ.நா.போன்ற சுதந்திரமான அமைப்புகள் மூலம் இங்குள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னரே மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும் என்று -

மிதிவெடிகள் அகற்றப்படாத நிலையில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கக் கூடாது என்றும் -

அவர் சுட்டிக்காட்டிக் கோரும் விடயங்கள் மறுகேள்வியின்றி பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளே என்பதில் யாருக்கும் ஆட்சேபம் இருக்கமுடியாது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்ற ஆசை - அவா - எத்தனை உணர்வுபூர்வமான விடயம் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் உணர்ச்சி பூர்வமான விடயத்துக்காக அப்பாவிப் பொதுமக்களின் உயிரோடு, அவயவங்களோடு விளையாடுவதற்கும் அனுமதிக்க முடியாது; அத்தகைய முடிவை நாம் எடுக்கவும் முடியாது.

எனவே அவசரப்படாமல் மிதிவெடிகள் அகற்றப்பட்டு, ஆபத்து நிலை நீங்கி விட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மக்களை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும்.

அதற்கு முன்னர், சர்வதேச அமைப்பு ஒன்றின் கண்காணிப்பின் கீழ் மிதிவெடி அகற்றும் திட்டத்தை முனைப்புடன் செயற்படுத்த வேண்டும். இல்லையேல் புதைந்து ஒளிந்திருக்கும் மிதிவெடிகள், பொறிவெடிகள் காலங்காலத்துக்கு எமது சந்ததிகளை முடமாக்கி (நடைப்)பிணமாக்கும் கொடூரத்தைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கும்.

'தெய்வம் நின்று கொல்லும்' என்பார்கள். ஆனால் மிதிவெடியோ இன்றும் கொல்லும்; நின்றும் கொல்லும்; என்றும் கொல்லும். அத்தகைய ஆபத்தான விவகாரத்தில் முடிவெடுக்கும் பொறுப்பை மிகுந்த அவதானத்துடன் மேற்கொள்ள வேண்டும். படை மற்றும் சிவில் அதிகாரிகள் கவனிப்பார்களாக!

# அரசியல் ஸ்திரமற்ற இவ்வேளையில் பொ.ஐ.மு - ஐ.தே.க. ரகசியப் பேச்சு

## ஜே.வி.பி. பிரசாரச் செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை1

அரசியல் ஸ்திரமின்மையும் தடுமாற்ற நிலையும் நிலவும் இன்றுள்ள காலகட்டத்தில் -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கட்சியும் இரகசியப் பேசசுக்களில் ஈடுபடவுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

முன்னணியின் மாணவர் பிரிவு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையிலேயே முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரு கட்சிகளின் முக்கிய பிரமுகர்களுக்கு இடையில் நாடாளுமன்ற வளாகத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்தப் பேச்சுக்களில் அரச தரப்பில் அமைச்சர்களான கதிர்காமர், அனுருத்த ரத்வத்த, மங்கள சமரவீர ஆகியோரும் -

ஐ.தே.க. தரப்பில் டிரோன் பெர்னாண்டோ, மஹிந்த சமரசிங்க, ரோஹித போ கொல்லாகம ஆகியோரும் - பங்குபற்றியுள்ளனர் என்றும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார். (க-3)

# நாட்டு நடப்பு

### ரியூட்டறி - III

தம்பியர்க்கு தனியே நாலுபள்ளி
தங்கையர்க்கும் தனியே நாலு
நம்பியும் நங்கையாளு மொன்றாய்
நயம்பட ஒருங்கே கற்றால்
கண்டதும் கலைக்க மாட்டான்;
கவுணையும் இழுக்க மாட்டான்;
முண்டி அடித்தோடிச் சென்று
கொட்டிலில் முட்டிக்கொண்டிருக்கவும் மாட்டான்.

*- விகடகவி -*

# படித்த பாடமும் படிக்காத பாடமும்!

'கொழுத்த' சம்பளத்தையும் பல்வேறு விதமான 'படி'களையும் ஏராளமான சலுகைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பிலும் -

விடுதலைப் புலிகள் என்போர் மிகச் சிறிய ஒரு குழுவினர்; மறைந்திருந்து தாக்குகின்ற - நேரிலே வந்து போரிட முடியாத - கோழைகள்; அரசு குவித்து வைத்திருக்கின்ற அதி நவீன ஆயுதங்களைக் கொண்டு இரண்டொரு மாதங்களில் அந்தப் புலிகளை அழித்தொழித்து விடலாம் என்ற தவறான விளக்கம் கொடுத்த உற்சாகத்திலும் -

சிங்கள மக்களுக்கு மட்டுமே உரிய ஸ்ரீலங்காவை, விடுதலைப் புலிகள் துண்டாட முயல்கின்றார்கள்; அதை அனுமதித்தால், தென்னிந்தியத் தமிழர்களுடன் சேர்ந்து, தென்னிலங்கையையும் அவர்கள் பிடித்துவிடுவார்கள்; சிங்கள மக்கள் கடலிலே குதித்து மாள வேண்டியதுதான் என்ற ஆதாரமற்ற - அர்த்தமற்ற அச்சம் கொடுத்த தூண்டுதலிலும் -

இலங்கை இராணுவத்திற் சேர்ந்த 'அப்பாவி'ச் சிங்கள இளைஞர்கள் -

இதே காரணங்களால், இராணுவத்திற் சேரும்படி தம் பிள்ளைகளைத் தூண்டி உற்சாகப்படுத்திச் சேர்ப்பித்துவிட்டு, பின்னர் அதே பிள்ளைகளைப் படுகாயமுற்றோராகவும், அங்கவீனர்களாகவும் 'அவச்சாவு' அடைந்தவர்களாகவும்கண்ட, சிங்களப் பெற்றோர்கள் -

தமிழர்களும் மனிதர்கள்தாம்; அவர்களும் இந்த நாட்டு மக்கள்தாம் நாங்கள் அனுபவிக்கின்ற உரிமைகள், சலுகைகளை அவர்களும் அனுபவிககத்தான் வேண்டும் என்று நினைக்கின்ற, நியாயபுத்தி படைத்த சில சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்கள் -

வேதனைக்கும் சோதனைக்கும் ஆளாகி, விரக்தியின் விளிம்புக்கே சென்றுவிட்ட இலங்கைத் தமிழ் மக்கள் -




போன்ற பல்வேறு பிரிவினரால் 'இன்று வரும்', நாளை வரும்', நாளை மறுநாள் வரும்' என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்ட 'சண்டை நிறுத்தம்'; சமாதானம்' என்பவை 'இனி, வரவே வராவோ? என அச்சப்பட்டு, அவநம்பிக்கைப்பட்டு அதிருப்திப்படுமளவுக்கு அரசியல் வானம் மப்பும் மந்தார முமாய் மங்கிப்போய்க் கிடக்கின்றது!

இந்த நிலையை உருவாக்கியவர்கள் யார்?

அரசாங்கமா? விடுதலைப் புலிகளா?

சண்டை செய்வதனால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது எனச் சொன்னவர்களும், சொல்லி வருபவர்களும் இவர்கள்தாம்!

பேச்சு மூலந்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் எனச் சொன்னவர்களும், சொல்லிவருபவர்களும் இவர்கள்தாம்!

சண்டை நிறுத்தபடும் - சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் - என்ற ஒரு கனவை - ஓர் எதிர்பார்ப்பை - ஒரு நம்பிக்கையை மக்களின் மனதிலே முளைகொள்ளச் செய்தவர்களும் இவர்கள்தாம்!

ஓர் ஒழுங்கான படிமுறையில் அமைந்த சண்டை நிறுத்தம் - சமாதானப் பேச்சுவார்த்தை - இனப்பிரச்சினைக்குரிய நீதியான தீர்வு - ஆகியவற்றுள் ஒன்றாவது இதுவரை சாத்தியப்படாமல் இருப்பதற்கும் இந்த இரு சாராரும்தாம் காரணர்களா? அல்லது ஒரு சாரார் மட்டுமா?

ஒரு சாரார் மட்டுந்தான் என்றால், அந்த ஒரு சாரார் யார்?

நீதியான தீர்வு என்பது கூர்ந்த மதியையும் ஆழ்ந்த சிந்தனையையும், தேர்ந்த அரசியல் ஞானத்தையும், சூழ்ந்த பொறுமையையும் நீண்ட காலத்தையும் இன்றியமையாத முன் நிபந்தனைகளாகக் கோருகின்ற - கடினமான, சிக்கலான - ஒரு செயற்பாடாக இருக்கலாம்!

ஆனால் - சண்டை நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை - ஆகிய முன்னவை இரண்டும் உடனடியாகவே செய்யப்படக் கூடியவை!

இந்த விஷயங்களில், இரு சாரரினதும் 'சாதனைகள்' எவை?

நீதியான ஒரு தீர்வைக் காண்பதற்காக - சண்டையை நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்குத் தாம், முன்வருவதாக முதன் முதலில் மிகத் தெளிவாக அறிவித்தவர்கள் விடுதலைப் புலிகள்!

அத்துடன் நிற்காமல், ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நான்கு மாதங்களாக நேர்மையாக அதைக் கடைப்பிடித்தவர்களும் அவர்களே!

ஆனால், அரசாங்கமோ -

விடுதலைப் புலிகளின் இந்தப் பிரகடனத்திற்கு 'உள்நோக்கம்' ஒன்றிருப்பதாகச் சொல்லி, அதைக் கொச்சைப்படுத்தி, தன் இச்சைப்படி புதிய போர் ஒன்றைத் தொடுத்து, 'மிச்சம் மீதி'யாக இருந்த தன் 'வீரத்தையும் மானத்'தையும் இழந்து 'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி' என்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது!

கொடிய போரிலிருந்து, படிக்க வேண்டியவற்றைப் படிக்கவும் அவற்றின்படி நடக்கவும், அரசு பிடிவாதமாக மறுத்து வருவதுதான் இன்றைய இக்கட்டான நிலைமைக்குரிய முக்கிமான காரணம்!

நிபந்தனை எதுவுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் முன்வருவதாகப் புலிகள் அறிவித்தது உண்மைதான்!

தம்மீது இலங்கை அரசு விதித்த "தடை"யை நீக்கினால் மட்டுமே தம்மால் பேச்சுகளில் கலந்துகொள்ள முடியும் என அவர்கள் இப்போது கூறி வருவதும் உண்மைதான்!

இப்படிக் கோருவது ஒரு "நிபந்தனையல்ல" என அவர்கள் சொல்லி வருவதும் உண்மைதான்!

புலிகளின் இந்த நிலைப்பாடு, சிலருக்குக் குழப்பத்தையும், தடுமாற்றத்தையும் ஏற்படுத்தி வருவதும் உண்மைதான்!

ஆனால், சற்று ஊன்றிச் சிந்தித்தால், குழப்பம் எல்லாம் நீங்கிவிடும்; தவறு யார் மேல் என்பதும் புரிந்துவிடும்!

பிரமிக்கத்தக்க பல வெற்றிகளை ஈட்டிய நிலையில் - இலங்கை அரசின் முதுகிலே குத்த விரும்பாத ஒரு மனநிலையில் - 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று இராமனாய் உயர்ந்து சமாதானத்துக்காக அழைப்பு விடுத்தார்கள் விடுதலைப் புலிகள்!

ஆனால் -

உண்மை நிலைமையை உணரவும், நேர்மை வழியைக் கடைப்பிடிக்கவும் தவறு செய்வதை நிறுத்தவும், அன்றைய இலங்கை அரசனாலும் முடியவில்லை; இன்றைய இலங்கை அரசாலும் முடியவில்லை!

சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சாதகமான சூழலை உருவாக்கும் வகையிலே, ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நான்குமாதமாக அதை நடைமுறைப்படுத்தியபோது -

அர்த்தமுள்ள - ஆக்கபூர்வமான - நம்பிக்கையை மேலும் வளர்க்கக் கூடிய நடவடிக்கைகளை அரசும் எடுக்கும் என்றே புலிகள் எதிர்பார்த்தார்கள்!

நெஞ்சிலே நியாயத்தையும், நீதியையும், நாகரிகப் பண்புகளையும் கொண்ட பலரும் இதைத்தான் எதிர்பார்த்தார்கள்! ஆனால் -

வன்மம் நிறைந்த அரசோ, தன் சின்னத்தனமான சிந்தனையாலும் 'சில்லறைச் சேட்டை'களாலும், நல்லவர்களின் எண்ணத்திலே மண்ணைப் போட்டுவிட்டு -

'புலிகளை நம்பமுடியாது' எனக் கிளிப்பிள்ளையைப்போல் திருப்பித் திருப்பிச் சொல்வதிலே திருப்திகண்டு மகிழ்கின்றது!

இலங்கையின் இனப்பிரச்சினை, உலக நாடுகள் பலவற்றின் கவனத்தையும் அக்கறையையும் ஈர்த்துள்ள இந்தவேளையில் அரசின் நிலைப்பாடு - விடுதலைப்புலிகளை நம்ப வேண்டாமாம்!

1920ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களுக்கு வாய்மொழியாகவும், எழுத்திலும் கொடுத்த உறுதிமொழிகளை மறந்தும், மறைத்தும், மறுத்தும் வருவதைத் தன் பழக்கமாகவும் வழக்கமாகவும் கொண்டுள்ள சிங்களப் பேரினவாதத்தின் சின்னமாக விளங்கும் தன்னை -

எல்லோரும் நம்பலாமாம்; நம்ப வேண்டுமாம்! என்பதுதான் -

அரசுக்கு 'முண்டு' கொடுக்கும் 'தமிழ்ப் பிரதிநிதிகளே!' உங்கள் 'நம்பிக்கை' என்ன என்பதை அரசிடம் நீங்கள் கண்டதை சற்று விண்டு சொல்வீர்களா?

*- சித்தன்.*

## கடந்த ஒரு மாத காலத்தில்

# மட்டுநகரில் பிஸ்ரல் குழுவினரின் தாக்குதலுக்கு இலக்கான 11 பேர்

## அவர்களில் 9பேர் மரணம்; இருவர் படுகாயம்

மட்டக்களப்பு நகரில் கடந்த ஒரு மாத காலத்தில் 11பேர் பிஸ்ரல் குழுவினரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானவர்களில் இருவர் படுகாயங்களுடன் உயிர் தப்பி விட்டனர் எனவும் - ஏனைய ஒன்பது பேரும் சம்பவம் நடைபெற்ற இடங்களிலேயே உயிரிழந்து விட்டனர் எனவும் -

ஊடகத் தகவல் மையம் மேலும் அறி வித்துள்ளது. (க-7)

### நாளை

ஆனி 18
திங்கட்கிழமை
திதி: துவாதசி
முன்னிரவு 7.33 வரை.
நட்சத்திரம் : விசாகம்
காலை 6.05 வரை.
சுபநேரம் : 11.56 - 1.26
ர்ாகுகாலம் : 7.26 - 8.56
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு பெண்ணின் உள்ளம் கருணையின் கோவிலாக மாறும்போது அதற்கு இணையான வாஞ்சை இந்த அகிலம் அனைத்திலும் இல்லை.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



அறியாத பொருளொன்று கண்டேன்
அறிவிழந்து அதனை எடுத்தேன்;
அநியாயமாய்ப் பார்வை
தொலைத்தேன்;
அழகான கைகளையும் இழந்தேன்!

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 32 கொழும்பில் பிரபல தனியார் நிறுவனத்தில் பணி புரியும் இலக்கணத்தில் செவ்வாய் உள்ள மணமகனுக்கும், U.K இல் வசிக்கும் 30 வயது தோஷங்களற்ற மணமகனுக்கும், 27 வயதுக்குட்பட்ட மணமகள்கள் தேவை. தொடர்பு:-078-688126, கொழும்பு. (89440)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971இல் பிறந்த உத்தர நட்சத்திரத்தினை உடைய, பாவம் குறைந்த ஹொலண்டில் வசிக்கும் கணனி பொறியியலாளருக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர். சாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள.இல 1314, மே/பா, உதயன். (89536)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ரேவதி நட்சத்திரம், 2ஆம் பாதம் 42 கிரக பாவமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு, யா/இந்து கௌரவ குடும்பத்தில் இருந்து படித்த அழகுள்ள மணமகளை உறவினர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு:- விள.இல. 1315, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89576)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, நற்குணமுள்ள, செவ்வாய்க் குற்றமற்ற, சைவ போசனமுள்ள மணமகனுக்கு 30 வயதுக்குட்பட்ட சைவ போசனமுள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். திருமண சேவை நிறுவனங்கள் சேவை வழங்கினால் தரகுப் பணம் வழங்கப்படும். ஜாதகம் மற்றும் குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விள. இல. 1316, மே/பா. உதயன். (89620)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 44 வயது அனுஷம் 2ஆம் பாதம்,நட்சத்திரம் செவ்வாய் தோஷமற்ற ஆசிரியைக்கு மணமகன் தேவை. சைவ போசனம் விரும்பத்தக்கது. சீதனம் வழங்கப்படும். தொடர்பு:-திருமதி கலாதேவி தெய்வேந்திரன், வடலிய டைப்பு பிள்ளையார் கோயிலடி, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு. (89586)

## தவறிவிட்டது

கைதடி தெற்கைச் சேர்ந்த திருமதி முத்துக்குமாரசாமி நாகரத்தினம் என்பவரது தேசிய.அ.அட்டை (இல.505472470V), விசேட அ.அட்டை (இல.091033217) என்பன 28.06.2001 வியாழக்கிழமை யாழ்போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீ சுப்பிரமணிய "புத்தக சாலை" காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (89610)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (BROILERS), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:-இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (89596)

Broiler, Cullbirds, Cockerels, Soup chicken இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்) (89449)

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31,மானிப்பாய் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்றர் வளவு) (89582)

இறைச்சிக்கோழி புறொயிலர் வேண்டிய நிறையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- கிருஷ்ணா, விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (89583)

இறைச்சி கோழி (Broiler) விற்பனைக்குண்டு. விலை 1Kg ரூ. 150/= சுத்தம் செய்யப்பட்டது. 1Kg ரூ220/= வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு:- ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P NO. 3529, 2867. (89579)

இறைச்சிக்கோழி, Broilers, கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 40, கோயில வீதி, யாழ்ப்பாணம். (89614)

BROILER, கல்பேட்ஸ், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் தேவையான நிறையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-இல.68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (89366)

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. புறொயிலர் 1kgவிலை 160/= கல்பேட்டின் விலை 140/= சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். (குணம் கொத்துறொட்டிக் கடைக்கு அடுத்த வீட்டில்) இல. 334, கே.கே.எஸ். வீதி, சிவன் கோயிலடி, வாடிக்கையாளர்களுக்கு கழிவு உண்டு. (89630)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2072 சொனி கலர் T.V நியூஸ் மேற்-50 YCLS மொடல் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கா.கணேசலிங்கம், 521/12, பருத்தித்துறை வீதி, நல்லூர். (89615)

8 அடி ஒரிஜினல் டிஸ் அன்ரனா அஸ்ரா கேஸ்ட் ரிசிவருடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 30S, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (89622)

## விற்பனைக்கு

தண்ணீர் மெத்தை (WATER MATERESS) (பாவித்தது) விற்பனைக்குண்டு. இதுபடுக்கைப்புண் (BEDSORE) வருவதிலிருந்து பாதுகாப்பளிக்க கூடியது தொடர்புகளுக்கு: பரமேஸ்வரம்பிள்ளை (சோமுவாத்தியார்), சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. (89594)

ஆலய பாவனைக்கு உகந்த (இந்திய தயாரிப்பான) புதிய, பெரிய கோண் ஸ்பீக்கர்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (89553)

C.D. 125 TWIN MODEL மோட்டார் சைக்கிள் (நல்ல நிலையில் உள்ளது) (TOPPING CONDITION) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.சண்முகநாதன், 75, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (89591)

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் C.D.125 TWIN மொடல் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல.81/1, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (89584)

ஓடு, பாலைத்தீராந்தி, நிலை கதவு, நிலை யன்னல் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: இல.52, வைமன் வீதி, நல்லூர். T.P NO .3308. (89560)

2, 4, 6 K.W. LISTER ஜெனரேற்றர், 13K.V.A. 3 PASS டைனமோ B.S.A 3.5 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு தொடர்பு: மூர்த்தி, சிவன் வீதி, பரவைக்குளம்,திருநெல்வேலி. (89611)

LOVE BIRDS மஞ்சள் நிற குருவிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- A.டானியல், வன்னியசிங்கம் வீதி, தாவடி றோட், இணுவில் (விவசாய ஒழுங்கைமைப்புக்கருகில்/ G.S. அலுவலகத்துக்கு முன்பாக). (89607)

வீட்டுப் பொருள்கள், கருங்காலி SOFAகள், பெட்டகங்கள், கட்டில்கள், கதிரைகள், சமய விஞ்ஞானப் புத்தகங்கள், பித்தளைப் பொருள்கள், அம்மிகள், திருகை, மான் கொம்புகள், சாப்பாட்டுக் கோப்பை வகைகள் ஆகியன உடன் விற்பனைக்கு உண்டு. 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (சீனியர் லேன் அருகில்) (89613)

21, 200, 203 தொடர்பாக இலக்கமுடைய கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட ஓட்டோக்கள் விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு: 38,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (89628)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர்க் கோழி (மலிவு விலையில்) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு:- சங்கீத இல.40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில்). (89575)

## ஆனந்தா சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? நோய் நீங்குமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் என்பவற்றின் மூலமாகப் பலன் சொல்லப்படும். தொடர்பு: த.சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிடம், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89629)

## தேவை

வீடு வாடகைக்குத் தேவை. வண்ணார்பண்ணை, வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடு தேவை. தொடர்புகளுக்கு: செ.துரைரட்ணம், 55/1, சீனியர் ஒழுங்கை, கலட்டி, வண்ணார்பண்ணை. (89542)

தமிழ் டைப்றைற்றர் (புதிய அல்லது பாவித்த நல்ல நிலையில் உள்ளது) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்:- கனகராஜா சாந்தினி, ஊனிகோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய். (89588)

சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், திருநெல்வேலி பகுதிகள் விரும்பத்தக்கன. தொடர்பு: Dr.T.குலசிங்கம், மெடி கிளினிக், மானிப்பாய். காலை 8.30 - 12.30வரை. (89631)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 16 - 08 - 1950

உதிர்வு 01 - 06 - 2001

## அமரர் முத்துத்தம்பி காந்தரூபன்

(சிறைச்சாலை உத்தியோகத்தர்)

பார் போற்றும் பண்பாளன் நீ ஐயா!
மார் அடைப்பால் மரணித்த செய்தி கேட்டு
கூர் மழுங்கிய வேலானோம் - இவ்வையகத்தில்
ஆர் இனி எம் வேதனையை உணர்வாரோ புரியவில்லை?

அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (01. 07. 2001) ஞாயிற்றுக்கிழமை எங்களது இல்லத்தில் நடைபெறும்.

குடும்பத் தலைவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், குடும்பத்தினர்.

இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி. (C/17261)

# கல்வி டிப்ளோமா பரீட்சை இன்று

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்கல்வி டிப்ளோமா ஆண்டிறுதிப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என்று பிராந்திய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

அனுமதி அட்டைகளில் யாழ்மத்திய கல்லூரியில் பரீட்சை நடைபெறுவதாகக் குறிப்பிட்டது தவறு என்றும், யாழ்.பிராந்திய நிலையத்திலேயே மேற்படி பரீட்சை நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 26 - 12 - 1936

உதிர்வு 01 - 06 - 2001

## திருமதி தணிகாசலம் சின்னமணி

எம்குடும்ப விளக்கே! அம்மா!
"நோயில்"அழுந்தி நொந்து மனம் வாடாமல்
மின்னலென நீர் மறைந்து மீளாத்துயர் எமக்குத் தந்தீரே!
'ஓ'வென்று நாமலற ஓடி மறைந்தீரே நம் கண் முன்!
விம்மி வெடிக்கும் எம் வேதனை புரியவில்லையோ?
விடை பெறாமல் சென்றது தான் சரியோ?
மாளாது நம் துயர் நம்முயிர் மாளுமட்டும்!
என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (01-07-2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது வீட்டுக் கிருத்தியமும் ஆத்ம சாந்தி வழிபாடும் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அதில் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன்:- வி.தணிகாசலம்
மக்கள் :- த.மகிமதாஸ்,
த.தர்மதாஸ்
(முன்னாள் கிராம சேவையாளர், பருத்தித்துறை.)
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குடத்தனை வடக்கு,
குடத்தனை. (89624)

# முதலாம் ஆண்டு நினைவில்...



மண்ணகம் 1942 - 04 - 05

விண்ணகம் 2000 - 07 - 11

## திருமதி திலகவதி சுந்தரலிங்கம்

எமது அன்புத் தாயே!
எம் குடும்ப ஒளி விளக்கே!
எம் உயர்வு காண்பதற்கே
ஓயாது உழைத்த அன்னையே!
ஐயாவைப் பிரிந்த எமக்கு
ஆறுதல் நீ தந்தாயே!
தாயும் தந்தையுமாய்
எம்மை அணைத்த தெய்வமே!
உன் பிரிவால் வாடுகிறோம்
ஆறுதல் கூற யாருமில்லையம்மா!
ஆண்டு ஒன்று உருண்டோடி விட்டதே!
ஆறவில்லை எம் துயரம்
மீளவில்லை உம் நினைவிலிருந்து.

- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அரியாலை. (89032)

## தமிழ்ச்செல்வனின் வாகனம் மீதான தாக்குதல்:

# கொக்காவிலில் ஊடுருவியோர் விடுதலைப் புலிகளிடம் சிக்கினர்?



கொக்காவில் காட்டுப்பகுதியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலைப் பலரும் மறந்திருக்கலாம். இந்தத் தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்ற ஐயம் இன்னமும் முற்றாகத் தீர்ந்துவிடவும் இல்லை. புலிகள் கூறியது போன்று படையினர்தான் இத்தாக்குதலை நடத்தினார்கள் என்பதைப் படைத்தரப்பினர் முற்றாக மறுத்திருந்தனர். மாறாகப் புலிகளுடைய உள் முரண்பாட்டினாலேயே இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது என்ற படைத்தரப்பின கூற்றினைப் புலிகளும் நிராகரித்திருந்தார்கள். இந் நிலையில் இந்தத் தாக்குதலைக் கொக்காவில் பகுதிக்குள் ஊடுருவியிருந்து நிகழ்த்தியவர்களைப் புலிகள் கைது செய்துவிட்டார்கள் என்ற செய்தி வன்னி மக்களிடையே பரவலாகப் பேசப்படுகின்றது.

மேற்படி செய்தியானது, புலிகள் திட்டமிட்டுப் பரப்பும் செய்திகள் இல்லையேல் வன்னி மக்களிடையே ஒரு வதந்தியாக வலம்வரும் செய்தியாக இருக்கிறதா அல்லது உண்மையிலேயே இத்தாக்குதலை நடத்தியவர்களைப் புலிகள் கைது செய்துவிட்டார்கள்தானா என்ற ஐயம் இப்போது எவருக்குமே ஏற்பட்டுவிடுவது தவிர்க்க முடியாதது. எனினும் இதன் பின்னணி பற்றிய குழப்பங்களைத் தீர்ப்பதற்கு நாம் மேலும் சில தகவல்களை அறிய வேண்டிய தேவை இருக்கின்றது.

வன்னி மக்களைப் பொறுத்தவரை இந்தச் செய்தி அவர்கள் எதிர்பார்த்த விடயம்தான். உண்மையிலேயே இந்தத் தாக்குதலைப் படையினரின் ஊடுருவல் அணியினர்தான் நடத்தியிருந்தார்கள் என்றால் அவர்களைப் புலிகள் கைது செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையை வன்னி மக்கள் இழந்து நிற்கவில்லை. எனினும் ஊடுருவியவர்களைப் புலிகள் கைது செய்ய நாள்கள் நீடித்துக் கொண்டே சென்ற சமயம் அரச ஊடகங்கள் கூறிய போலிப் பிரசாரத்தில் உண்மை இருக்குமோ என்ற ஐயம் வன்னி மக்களிடையே ஏற்பட்டிருந்ததும் உண்மைதான். தற்சமயம் யாவுமே வெளிச்சத்துக்கு வந்திருக்கும் நிலையில் மக்களிடையே புலிகள் இவர்களை எவ்விதம் கைது செய்திருப்பார்கள் என்பதை ஆராய்ந்து பார்க்கும் போக்கினைக் காணமுடிகின்றது. இதற்குக் காரணமும் இருக்கிறது. புலிகள் இவர்களை எங்கே வைத்துக் கைது செய்தார்கள் என்பதையோ எத்தனைபேர் கைதானார்கள் என்பதையோ தெரிவிக்கவில்லை. எனவே வன்னி மக்களிடையே இதற்கு விடை காணும் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கொக்காவில் கண்ணிவெடித்தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் புலிகள் நடந்து கொண்ட விதமே இத்தாக்குதலைப் படைத் தரப்பினர்தான் செய்திருப்பார்கள் என்ற முடிவுக்கு ஒருவர் வந்துவிடலாம் என்பதை வன்னி மக்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். தாக்குதல் நிகழ்த்தப்பட்ட சமயம் சமாதான முயற்சிகளில் தமிழ்ச்செல்வன் ஈடுபட்டிருந்தார். இத்தகையதொரு பயணத்தின் போதுதான் அவரது வாகனத்தை இலக்கு வைத்து கண்ணிவெடித்தாக்குதலும் நடத்தப்பட்டது. ஆனால் புலிகள் இதனைத் தங்களது பிரசாரத்துக்காகப் பயன்படுத்தவில்லை. இத்தாக்குதலைச் செய்தவர்களைத் தேடிப் புலிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை மட்டும் அறிவித்த புலிகள் மேற்கொண்டு எதனையுமே தெரிவிக்காமல் இருந்துவிட்டார்கள்.

எனினும், இத்தாக்குதல் பற்றிய செய்திகள் பல்வேறு விதமாக அப்போது வெளிவந்து கொண்டிருந்தன. தமிழ்ச் செய்தி ஊடகங்கள் பலவும் இது படைத்தரப்பின் திட்டமிட்ட தாக்குதலே என்றும் தெரிவித்தும் இருந்தன. ஆனால் புலிகள் தங்களது வானொலி, பத்திரிகைகளில் இச்செய்தி தொடர்பாக எதனையுமே தெரிவிக்காமல் மௌனமாகவே இருந்தார்கள். புலிகளது இந்த மௌனம்தான் வன்னி மக்களிடையே குழப்பத்தை உண்டு பண்ணியிருந்தது. அதாவது அரச ஊடகங்கள் தெரிவிப்பது போன்று இது புலிகளுக்குள் இருந்த முரண்பாட்டினால்தான் நடத்தப்பட்ட தாக்குதலாக இருக்குமோ என்று இதனைப் போலிப்பிரசாரம் என்பதைப் புரிந்து கொண்டும்கூட மக்கள் எண்ணத் தலைப்பட்டிருந்தனர்.

ஆனால் மக்கள் மத்தியிலேயே பரப்புரை நடத்தும் புலிகளின் அரசியல் துறை பிரமுகர்கள் எல்லோருமே துரோகிகள் பற்றியே அதிகம் மக்களுக்குக் கருத்துக் கூறியமை கொக்காவில் தாக்குதலின் பின்னர் என்பதைக் கவனிக்கும்போது புலிகளுக்குள் முரண்பாடு ஏற்பட்டிருக்கும் என்றால் அரசின் பொய்ப்பிரசாரத்துக்குள் மூழ்கிவிட வன்னிமக்கள் தயாராக இருக்கவில்லை என்பதையும் கவனிக்கலாம் என்கிறார்கள் சிலர். அத்துடன் மக்களுக்குப் புலனாய்வு ரீதியிலான அறிவுரைகளை வழங்கி புலனாய்வுப் பணிகளில் ஈடுபடவும் புலிகள் செய்திருக்கின்றதைப் பார்க்கும்போது கொக்காவில் தாக்குதல் துரோகிகளினாலேயே செய்யப்பட்டது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம் என்கிறார்கள் வன்னி மக்கள்.

சமீப காலமாகப் பரப்புரை நிகழ்த்திய புலிகளின் முக்கிய பிரமுகர்கள் தெரிவித்த கருத்துகள்தான் இந்தக் கொக்காவில் தாக்குதல் நடத்தியவர்களைப் புலிகள் கைது செய்துவிட்டார்கள் என்று நம்பத் தூண்டியிருக்கின்றது. தமிழினத்துக்குள் துரோகிகள் கூட்டம் அழிந்து போய்விடவில்லை என்பதைச் சில சம்பவங்கள் எமக்கு உணர்த்திநிற்கின்றன. எனினும் இந்தத் துரோகிகளால் எமது போராட்டத்துக்கோ மக்களுக்கோ எதிராக எதனையும் செயற்படுத்த முடியாது என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெளிவாக உணர்த்தி வருகிறோம். இத்தகைய துரோகிகள் எமது பகுதிக்குள் தமது நாசக்காரச் செயல்களைச் செய்வதற்காகப் பல்வேறு வழிகளில் முயன்று வருகின்றார்கள். ஆனால் இவர்கள் எவருமே எம்மிடமிருந்து தப்பிச்சென்றுவிட முடியாது என்பதை மட்டும் நாம் அவர்களுக்குச் செயலிலேயே உணர்த்தி வருகின்றோம்.

இவ்வாறு கூறியிருக்கிறார் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர்.

அத்தோடு, இவ்வாறு ஊடுருவியவர்களைப் பிடித்ததற்கு மக்களின் பங்களிப்பும் உதவியாக இருந்ததையும் புலிகள் பரப்புரைகளின் போது சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே புலிகள் வேறு மக்கள் வேறு என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. நாங்கள் எல்லோருமே தமிழீழத் தேசத்திற்கான விடுதலை வேள்வியில் குதித்திருப்பவர்கள். எனினும் மக்கள் படையணிகளாக இருந்தபடியே நீங்கள் செய்யும் பங்களிப்பானது எமது தேசத்தின் விடுதலையை முன்னகர்த்திச் செல்கின்றது. அத்தோடு எங்கள் மண்ணைப் பாதுகாப்பதற்கு எதிரிகளோடு இணைந்து செயற்படும் துரோகிகள் மேற்கொள்ளும் சதிகளையும் முறியடிக்கும் அளவுக்கு நீங்கள் வேகமாகச் செயற்படுகின்றீர்கள். தொடர்ந்தும் துரோகிகளது சகல முயற்சிகளையும் நீங்கள் முறியடிக்க வேண்டும் என்கிறார் புலிகளின் இன்னொரு முக்கிய உறுப்பினர்.



இவற்றினைவிட புலிகளோடு இணைந்து கொக்காவில் தாக்குதலை நடத்தியவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த எல்லைப்படை அணி வீரர்கள் கூட இவ்வாறு துரோகிகளைக் கைது செய்ததை மக்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். இதிலும் வேடிக்கை என்னவென்றால் புதையல் தேட பூதம் அகப்பட்ட கதையாக புலிகள் குறிப்பிட்ட நபர்களை இலக்குவைத்துத் தேடிக்கொண்டிருக்க அவர்களின் கைகளில் வேறு பகுதிகளில் ஊடுருவியிருந்த வேறு சிலரும் மாட்டிக் கொண்டார்கள் என்பதுதான்.

புலிகள் கொக்காவில் பகுதியை மட்டும் இலக்கு வைத்துத் தேடுதலை நடத்தாமல் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின் போது படையினர் கைப்பற்றியிருந்த வன்னிப் பெரு நிலப் பரப்பின் சகல இடங்களையும் அதிரடியாகச் சுற்றி வளைத்துத் தேடுதலைத் தீவிரப்படுத்தியிருந்ததோடு மக்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளை மக்கள் படையணிகளைக் கொண்டே தேடுதல் நடத்தியதில்தான் காடுகளில் ஊடுருவியிருந்த பல்வேறு படைப் பிரிவினரும் மாட்டிக்கொள்ள நேரிட்டிருக்கிறது.

உண்மையில் கொக்காவில் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தியவர்களைக் கண்டுபிடிக்க வேண்டியது என்பது புலிகளுக்கு ஒரு புறம் கௌரவப் பிரச்சினையாக இருந்த போதிலும், இந்தத் தாக்குதலாளிகளைத் தப்பிச் செல்லவிடுவதே புலிகளுக்குப் பெரும் பாதகமான முடிவினைத் தரும் என்பதால் இவர்களை எப்படியேனும் பிடித்தே ஆக வேண்டிய அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டிருந்தது. இவ்வாறு ஊடுருவி இருந்தவர்கள் தங்கியிருந்த இடங்கள், தங்கள் தேவைக்காக இவர்கள் பயன்படுத்திய - வன்னியில் வசித்துவரும் நபர்கள் - மற்றும் இவர்களது திட்டங்கள் எல்லாம் மீளவும் எதிரிகள் வசம் சேதமின்றிச் சென்றுவிடுவது தங்களுக்குப் பெரும் ஆபத்தாகவே இருக்கும் என்பதால் இவையாவற்றையும் முறியடிக்கத் தாக்குதலாளிகளைக் கைது செய்யவேண்டிய அவசரத் தேவையைப் புரிந்து கொண்டு செயற்பட்ட புலிகள் இதில் வெற்றியும் பெற்றிருப்பதோடு மேலதிகமாகவும் இலவசமான வெற்றிகளையும் பெற்றிருக்கிறார்கள்.

இதற்கு முன்னரும் முல்லைத்தீவு இராணுவ முகாம், ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைப் படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் பின்னர் ஏராளமான இராணுவத்தினர் காடுகளில் வைத்துப் புலிகளால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். எனினும் அவர்கள் அனைவரும் புலிகளின் தாக்குதலால் காடுகளுக்குள் தப்பியோடி வழி தெரியாமல் மாட்டிக் கொண்டவர்கள். தற்சமயம் கைதானவர்களோ புலிகளைத் தாக்குவதற்காகவே ஊடுருவி இருந்தவர்கள். எனினும் இவர்கள் அனைவருமே புலிகளால் கைது செய்யப்பட்டமை வெளித்தெரியாமலே இருந்துவிடப்போவதுதான் பரிதாபத்துக்குரியதாகும். எப்படியோ புலிகள் ஆச்சரியத்தை ஏற்படுத்திய கொக்காவில் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தின் புதிரை விடுவித்திருக்கிறார்கள். கூடவே இரட்டை வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். என்ன, இவ்வாறு பிடிபட்டவர்களின் கதிதான் இனி என்னவாகுமோ என்று மக்கள் கவலைப்படுகிறார்கள். அதே சமயம் இவர்களுக்கு என்ன முடிவு காத்திருக்கின்றது என்பதையும் இந்த மக்கள் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லைத்தான்!

- *நன்றி: ஆதவன்*

★ ★ ★

## கலித்தொகைப் பாடல் காட்டும் தலைவன் - தலைவி அன்புச் சந்திப்பு!

### இலக்கியச் சோலை

சிறுவயதில் பெண்களுக்குத்தான் தாய்மைக்குணம் வந்துவிடும். சிறுவயதிலே அவர்கள் விளையாடும் விளையாட்டுகளைப் பாருங்கள். பொம்மைகளைக் குளிப்பாட்டி அதற்குரிய சகல சேவைகளையும் செய்வது, தாலாட்டுவது, சிறுமணல் வீடு கட்டிக் குடும்பப் பொறுப்பை ஏற்பது போன்ற விளையாட்டு, அடிசில் சமைப்பது போன்ற விளையாட்டுகளில் நாட்டம் பெண் பிள்ளைகளுக்கு.

ஆண்பிள்ளைகள் என்றால் கொஞ்சம் துடியாட்டம் தான். கோயில் திருவிழா, சுவாமி எழுந்தருளல், மேளக் கச்சேரி.... இன்னோரன்ன விளையாட்டுகள். வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்பார்கள். குழந்தைப் பருவம் மாறிக் குமரப்பருவமும் கடந்த பின்னர் கட்டிளம் பருவம். ஓடியாடி விளையாடியவர்கள் மீண்டும் சந்தித்தால் கேட்கவா வேண்டும்?

பெண் ஒருத்தி தன் தோழிக்குச் சொல்கிறாள்.

"ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த பெண்ணே அன்று நடந்ததொரு சம்பவத்தைக் கேளடி!

"அன்றொரு நாள் நானும் அம்மாவும் தனித்திருந்தோம். வாசலில் யாரோ 'தாகத்துக்குத் தண்ணீர்' என்று ஒரு குரல் கேட்டது.

அம்மா "வாசலில் யாரோ வழிப்போக்கனாக்கும் தண்ணீர் கேட்கிறான். கொண்டுபோய்க் கொடு!" என்றாள். நானும் தண்ணீர்ச் செம்பைக் கையிலே எடுத்துக்கொண்டு வெளியே சென்றேன். செல்லும் போதே எனது உள்ளம் என்வசமில்லை. உடலெல்லாம் புல்லரித்தது; உள்ளம் நடுங்கியது; நா பேச மறுத்தது"

"பிறகென்ன?" என்றாள் தோழி.

"தண்ணீர்ச் செம்பைக் கொண்டு சென்ற என் முன்னே ஓர் இளைஞன் நின்றான்."

"யாரடி அவன்?" என்றாள் தோழி.

"அந்த நாளில் எங்களது மணல் வீட்டைக் காலால் எற்றிக் குழப்பிச் செல்வானே. அவனேதான்" என்றாள்.

"பொல்லாத கிறுக்கனாயிற்றே!" என்றாள் தோழி.

"என்ன சொன்னாய்? அவன் அன்று எனது மணல் வீட்டைக் குழப்பினான். இன்று என் உள்ளத்தைக் குழப்புகிறான்."

"பிறகென்ன நடந்தது?" தோழி கேட்டாள்.

"தண்ணீர்ச் செம்பைக் கொடுத்தேன். என் கையையும் சேர்த்துப் பிடித்துவிட்டான்."

"அப்ப அவனது குறும்புத்தனம் இன்னமும் இருக்கே. என்ன செய்தாய் நீ?"

"உடனே 'அம்மா' என்று அலறினேன்"

"அம்மா ஓடி வந்திருப்பாளே?"

### "உதங்கா"

"வரவே செய்தாள். நான் சொன்னேன் தண்ணீர் குடிக்கும் பொழுது மடமட என்று குடித்தான். புரைக் கேறித் தவித்தான். நான் எங்கே இறந்துவிடப் போகிறானே என்று பயந்து கத்தினேன்! என்றேன்."

"அம்மா என்ன செய்தாள்?"

"அவனது முதுகை நீவியவாறே 'ஏன் அவசரம்? ஆறுதலாகக் குடிக்கலாமே!' என்றாள். அப்பொழுது அவன் என்ன செய்தான் தெரியுமா? கடைக்கண்ணால் நோக்கி கண் சிமிட்டிப் புன்முறுவல் செய்தான்."

*சுடர்த் தொடீ இ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்*<br>
*மணற்சிற்றில் காலின் சிதையா அடைச்சிய*<br>
*கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி*<br>
*நோதக்க செய்யும் சிறு பட்டி மேல் ஓர் நாள்*<br>
*அன்னையும் யானும் இருந்தேமா, இல்லீரே!*<br>
*உண்ணு நீர் வேட்டேன் எனவந்தற்கு அன்னை*<br>
*"அடற் பொற்சுரகத்தால் வாங்கிச் சுடரிழாய்*<br>
*உண்ணு நீர் ஊட்டி வா" என்றாள் என யானும்*<br>
*தன்னை அறியாது சென்றேன் மற்றென்னை*<br>
*வளை முன் கை பற்றி நலிய, தெருமந்திட்டு*<br>
*அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்*<br>
*என்றேனோ*<br>
*அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்*<br>
*உண்ணு நீர் விக்கினான் என்றேனோ, அன்னையும்*<br>
*தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்றென்னைக்*<br>
*கடைக் கணால் கொல்வான் போல், நகைக் கூட்டம்*<br>
*செய்தான் அக்கள்வன் மகன்.*

★ ★ ★

## சுன்னாகம் படைமுகாம் ஊடாக இரவில் மக்கள் செல்ல அனுமதி

வலிவடக்கு, ஜூலை1

காங்கேசன்துறை வீதியில் - சுன்னாகம் படைமுகாமுக்கு முன்பாக உள்ள பிரதான வீதித்தடை ஊடாக இரவில் பொதுமக்களும் மற்றும் வாகனங்களும் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதுவரைகாலமும் இரவு 7 மணியுடன் அந்த வீதியூடான போக்குவரத்து தடை செய்யப்பட்டு வந்தது.

மறுநாள் காலை 7 மணிக்கே அங்கு வீதித்தடை நீக்கப்பட்டு மீண்டும் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டது.

தற்போது இரவு ஊரடங்கு உத்தரவு 10 மணிக்கே அமுலுக்கு வருவதால் இரவு 7 மணிக்குப் பின்னரும் சுன்னாகம் படைமுகாமுக்கு முன்பாக உள்ள வீதித்தடை ஊடாக மக்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போது அதிகாலை 5 மணிக்குப் பின்னர் இந்தப் பிரதான வீதியூடாகச் செல்ல அனுமதிக்கப்படுவதால் ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை பகுதிகளிலிருந்து காலை வேளை சுன்னாகத்திற்கு வரும் விவசாயிகளின் சிரமங்கள் குறைந்துள்ளன. (ஜ-86)

## ஆண்டு விழா கொண்டாட ஏற்பாடு

வலி.வடக்கு, ஜூலை 1

தெல்லிப்பழை துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா அடுத்த மாதம் முதல்வாரத்தில் கொண்டாடப்படவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கடந்த இருபது வருடங்களாக தொண்டர் சபையின் உபதலைவராகப் பணி புரிந்தும் தற்போது வலி.வடக்கு பிரதேச சபைத்தலைவராகப் பதவி வகிக்கும் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் கௌரவிக்கப்படவுள்ளார். (ஜ-86)

## வலி. வடக்கிலும்

# கல்வி நிறுவனங்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை

வலி.வடக்கு.ஜுலை1

வலி.வடக்குப் பகுதியில் இயங்கும் தனியார் கல்விநிலையங்களை வெள்ளிக்கிழமைகளில் மூடிவிடுமாறு பணிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் வலி.வடக்குப் பிரதேச செயலக பிரிவுக்கூட்டத்தில் வைத்து இது தொடர்பான உத்தரவைப் பிரதேச செயலர் திருமதி.ப. திலகநாயகம் கிராம அலுவலர்களுக்கு வழங்கினார். இதனை அடுத்து வெள்ளிக்கிழமைகளில் கல்வி நிறுவனங்களை மூடுமாறு கோரும் கடிதங்களை கிராம அலுவலர்கள் கல்வி நிலையங்களுக்கு வழங்கியுள்ளனர்.

வெள்ளிக்கிழமைகளில் மாணவர்கள் ஆலய வழிபாடுகளுக்குச் செல்ல வசதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே வலி.மேற்குப் பிரதேச செயலகப் பிரிவிலும் இந்த நடைமுறை அமுல் செய்யப்பட்டு வருவது தெரிந்ததே. (ஐ)

## பெண்ணுக்கு அபராதம்

தென்மராட்சி.ஜுலை1

துன்னாலை குடவத்தைப் பகுதியில் கசிப்பு விற்பனை செய்த பெண்ணுக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் 25 ஆயிரம் ரூபா அபராதமும், ஐந்து வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் விதித்தார்.

இதே இடத்தைச் சேர்ந்த குமார் புஷ்பராணி என்னும் பெண்ணுக்கு கடந்த 27ஆம் திகதி இத்தண்டனை வழங்கப்பட்டது. (ஐ-117)


## கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும், சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில், **No: 89, HINNY APPUHAMY MAWATHA, CO.-13** இல் அமைந்துள்ளது **"VANI INN"**, லொட்ஜ். தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்தைப் பதிவுசெய்து வரலாம். மேலதிக விபரம் அறிய: T.P.01-433182, 472582

(88723) - முகாமையாளர்.


## அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி

வலிகாமம் தெற்கு.ஜுலை1

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் விசேட ஒதுக்கு நிதியில் இருந்து சில அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட உள்ளதாக பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் தெரிவித்துள்ளார்.

ஈவினை கற்பகப் பிள்ளையார் கோயில் வீதி மின்சார விநியோக விஸ்தரிப்புக்கென 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

உடுவில் மாருட்டி வீதி புனர்நிர்மாண வேலைகளுக்கு ஒரு லட்சத்து இரண்டாயிரம் ரூபாவும் -

சங்குவேலி வெட்டுக்கட்டை பிள்ளையார் வீதி புனரமைப்புக்கு 90 ஆயிரம் ரூபாவும் -

ஒதுக்கப்பட்டு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு உரியவர்களிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இவற்றின் வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் க.கமலசேகரன் தெரிவித்துள்ளார். (ஐ-152)

# நெஞ்சைவிட்டகலா இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் நல்லதம்பி காசிப்பிள்ளை

*(முன்னாள் பிரபல வர்த்தகர் - சங்கானை)*



**நல்லதம்பி பெற்றெடுத்த**
**நல் மகனாம் எங்கள் தெய்வம்!**
**நீங்கள் பெற்ற மக்கள், பெண்டிர்**
**மருமக்கள், பேரரோடு**
**ஊரிலே உத்தமராய்**
**உயர்வு பல பெற்று வாழ்ந்தீர்!**
**ஆண்டுகள் இரண்டு சென்றாலும்**
**அவனியில் நாம் மறவோம்...**

அன்புத் தெய்வமே! ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் அறநெறி வழுவா உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி, உங்களை எங்கள் உள்ளங்களில் இருத்தி எல்லாம் வல்ல சங்கானை மாவடி ஞான வைரவப் பெருமான் அருள்கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி வழிபடுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*மாவடி ஆலய வீதி,*
*சங்கானை.*

*ந.காசிப்பிள்ளை அன் சன்ஸ்,*
*அருள் ஆனந்த புடைவை நிலையம்,*
*சரணியா தொலைத்தொடர்பு நிலையம் -*
*கனனிப் பிரதி ஆக்கம்.* (89548)

நான்முகன் படைப்பில் 1917-03-02

காலனவன் பறிப்பில் 1999-06-24

# பாத்தீனியம்

## அழிக்கத்தவறின் தண்டனை!

உங்களது பயிர்களிடையே அல்லது தோட்டங்களில் பாத்தீனியம் களை காணப்படுமாயின் அது தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

- 1-6 மாதங்கள் வரை சிறைவாசம்
- ஒரு இலட்சம் வரை தண்டப்பணம்

### ஆபத்தான பாத்தீனியம் களையை அறிந்து கொள்ளுங்கள்

- செவ்வந்தியின் இலையை ஒத்தது
- ரோமங்கள் காணப்படும்
- வெண்ணிறமான சிறியபூந்துணர்களைக் காணலாம்

### கண்டவுடன் அழிக்கவும்

- உடனடியாக பிரதேசத்தின் விவசாயப் போதனாசிரியருக்கு அறிவிக்கவும்
- கிளைபோசெட் அல்லது 2-4D களைநாசினியை விசிறவும்
- தொடர்ந்தும் இதனை கட்டுப்படுத்தவும்
- பிடுங்கி எரித்துவிடவும்

மேலதிக விபரங்களுக்கு: பயிர்ப் பாதுகாப்புச் சேவை
விவசாயத் திணைக்களம், கண்ணோறுவை, பேராதனை.
தொலைபேசி இல: 08-388316 (C/17195)




மக்கள் வங்கி 40 ஆண்டுகள்

## சூரிய உதயம் ஜுலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை

எமது கதவுகள் திறந்திருக்கும் கொண்டாட்டங்களில் பங்குபற்றும்படி உங்களையும் அழைக்கின்றோம்.

40ஆவது ஆண்டு நிறைவை நாம் கொண்டாடும் இந்தத் தருணத்தில், உங்களது வாழ்க்கையின் ஒரு பகுதியாக - எப்போதும் இருந்து வந்த, எப்போதும் இருக்கும் வங்கியின் அரவணைப்பை அனுபவிக்கவென எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு உங்களை வரவேற்கின்றோம்

நாற்பது வருடப் பெறுபேறுகள்
சுபிட்சத்தோடு கூடிய எதிர்காலம்,

(C/17262)

# பேரியல் அஷ்ரப்புக்கு எதிராக அம்பாறையில் ஆர்ப்பாட்டங்கள்

## பல இடங்களில் கொடும்பாவிகள் எரிப்பு

அம்பாறை,ஜூலை1

அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் அவரின் சகாக்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரையும் அரசில் இருந்து வெளியேறுமாறு கோரி அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

வெள்ளிக்கிழமையான அன்றைய தினம் ஜும்ஆ தொழுகையை அடுத்து அம்பாறையில் உள்ள பெரும்பாலான பள்ளிவாசல்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஒலுவில், அட்டாளச்சேனை உட்பட பல இடங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான யு.எல்.எம். மொஹிதீன், யு.எல்.எம். ஹனிபா (மருதூர்கனி) ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

நிந்தவூர் பள்ளிவாசலில் தொழுகை முடிந்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதைத தடுக்கும் வகையில் பள்ளிவாசலைச் சுற்றிப் பலத்த பொலீஸ்காவல் போடப்பட்டிருந்தது.

கொடும்பாவி கட்டுவதற்காக அங்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களைப் பொலீஸார் எடுத்துச்சென்றனர். (க-3-14)

### வவுனியா குடும்பஸ்தர் தடுத்து வைப்பு

வவுனியா,ஜூலை1

வவுனியாவில் இருந்து கொழும்பு செல்வதாகக் கூறிச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் தற்போது கொட்டாஞ்சேனைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா - கற்குழியைச் சேர்ந்த ஆறுமுகம் சந்திரமோகன் (வயது 35) என்பவரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி மேற்படி நபர் கொழும்பு நோக்கிப் புறப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-7)

### வாண்மைவிருத்தி செயலமர்வு

தென்மராட்சி, ஜூலை1

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கோட்டக் கல்வி அலுவலர்கள், அதிபர்கள் ஆகியோருக்கான வாண்மைவிருத்திச் செயலமர்வுகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இரண்டு தினங்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ஐ-7-117)

### குறுவினாப் போட்டி

தென்மராட்சி,ஜூலை1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான வர்த்தக பாட குறுவினாப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ-7-117)

### கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை,ஜூலை1

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிரதேச மட்டத்திலான கைப்பணியாளர் சங்கம் அமைப்பதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்.

(ஐ-7-16)


**வெளிவந்துவிட்டது!**

2001 ஆம் ஆண்டு
A/L மாணவர்களுக்கான
தமிழ் வினாவிடை

ஆசிரியர்:
M.S. அமரசிவம் B.A.

கிடைக்கும் இடங்கள்:-
யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை,
நெல்லியடி சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை,
சுன்னாகம் சிவசக்தி புத்தகசாலை,
சங்கானை கேம்பிரிச் கல்வி நிலையம்.
(89606)



**அரங்கச் செயற்பாட்டுக்குழு-யாழ்ப்பாணம்**

**நாடகத் தயாரிப்புப் பயிற்சி**

நாடகத் தயாரிப்புத் தொடர்பான மூன்று மாத கால பயிற்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம். பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும், வார நாள்களில் மாலை நேரங்களிலும் நடைபெறும். இப்பயிற்சி ஜூலை நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 07-07-2001
பயிற்சிக் கட்டணம்: 100/-

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
அரங்க செயற்பாட்டுக்குழு,
19, பழம் றோட், கந்தர்மடம்.
(விண்ணப்பங்கள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.)

(89605) - செயலாளர்.


**ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 14 - 09 - 1916
மறைவு 10 - 07 - 1992

**அமரர் தம்பிப்பிள்ளை வீரசிங்கம்**

திதி: 01-07-2001

ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
உமது நினைவு இன்னும்
எம்மை விட்டு அகலவில்லை!
எவ்வளவு காலங்கள் கடந்தாலும்
உம்மை என்றும் நாம் மறவோம்!

உமது பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

'கம்பளை இல்லம்'
கட்டப்பிராய்.
(89578)


Robin Lemon
றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன்

**வாடிக்கையாளர்களுக்கு.....**

**நற்செய்தி!**

3 WRAPPERS




**3 றொபின்** லெமன் சவர்க்கார உறைகளை
உங்கள் வியாபாரியிடம் கொடுத்து
ஒரு சவர்க்காரக் கட்டியை
**இலவசமாகப் பெறுங்கள்!**

வெண்மையான சலவைக்கு
லெமன் வாசனை கலந்த
"றொபின் சோப்"பையே உபயோகியுங்கள்

(89059)

Robin Lemon
றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன்

## வாசகர் திருமுகம்

### மாகாணத் தமிழ்தினப் போட்டிகள்: யாழ். நடுவர்களுக்கு சதியா?

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்டத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் கடந்த 16 ஆம், 17 ஆம் திகதிகளில் இங்கு நடத்தப்பட்டு மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் அன்றே அறிவிக்கப்பட்டது.

இப்போட்டி நடத்தப்பட்ட விதம் பற்றியும், நடுவர்கள் நியமிக்கப்பட்ட விடயம் பற்றியும் அதிபர் சங்கத் தலைவரும், யாழ். மத்திய கல்லூரி அதிபருமான திரு. க. இராசதுரை 25. 06. 2001 அன்று 'உதயன்' பத்திரிகை மூலம், யாழ். மாவட்ட உயர் அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டியிருந்தார். இது சம்பந்தமாக எவரும் மறுப்பு அறிக்கை விடவில்லை. குற்றத்தை ஒப்புக் கொண்டது தான் என்னவோ காரணம் தெரியவில்லை.

இவ்வாறு மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் 1998 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வருடமே மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக திருகோணமலை செல்லவுள்ளனர்.

கடந்த ஆண்டுகளில் போக்குவரத்துச் சீரின்மையைக் காரணம் காட்டி யாழ். மாவட்ட மாணவரின் திறமைக்குத் தடை போடப்பட்டிருந்தது.

1998 ஆம் ஆண்டு திருகோணமலையில் நடத்தப்பட்ட மாகாண மட்டத்திலான தமிழ் மொழித் தினப் போட்டிகளுக்கு நடுநிலைமை வகித்த நடுவர்கள் திருகோணமலை மாவட்டத்துக்குச் சார்பாகப் பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்தனர். இதனால் பாதிக்கப்பட்ட வவுனியா மாவட்ட மாணவர்கள், மாகாண ஆளுநர் வரை தமது பிரச்சினையை எடுத்துச் சென்றனர்.

கல்வி அமைச்சின் 001/2000, 20-06-2000 ஆம் திகதிய 3,9 ஆம் இலக்க சுற்றறிக்கை மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் தமிழ் மற்றும் ஆங்கில தினப் போட்டிகள் அனைத்தும் மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாகவே நடைபெற வேண்டுமெனக் கூறுகிறது.

ஆனால் அது தற்போது மாணவர்களுக்கான இலவசப் பாடநூல் விநியோகப் பணிமனையாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரே அனைத்து வலயங்களையும் உள்ளடக்கிய மாகாணப் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார் இச்செயல் நிர்வாகச் சீர்கேட்டையே எடுத்துக்காட்டுகிறது.

இதேவேளை—

மாகாணமட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் எதிர் வரும் 7, 8 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருப்பதாகவும்—

அந்தப் போட்டிகளில் நடுவராகக் கடமையாற்ற வருகை தருமாறு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிலருக்கு கடந்த 28 ஆம் திகதி 'பக்ஸ்,' 'மூலம், அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி நடுவர்கள் திருகோணமலை செல்வதற்கான பயண ஏற்பாடுகளைச் செய்ய முடியாது என மாவட்ட மட்ட தமிழ்த் தினப்போட்டிக்கும் பொறுப்பான வலிகாமம் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துவிட்டார்,

மேற்படி நடுவர்களுக்கான கடிதங்கள் 23-06-2001 எனத் திகதியிடப்பட்டிருந்தும் 5 நாள்களின் பின்பே தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தத் தாமதம் திட்டமிட்ட சதி என்றே எண்ணத்தோன்றுகின்றது.

இத்தகைய செயற்பாடுகளுக்கு யாழ். மாவட்டக் கல்வி அதிகாரிகளும் துணைபோவது கவலையளிப்பதாகவுள்ளது.

யாழ். மாவட்ட மாணவர்களின் செயற்றிறனை ஏனைய மாவட்ட நடுவர்கள் கணிப்பிடும் போது யாழ். மாவட்ட நடுவர்கள் அதில் கலந்து கொள்ள முடியாத நிலை யாழ். மாணவரைப் பாதிக்கும் செயலாகவே அமைந்துள்ளது. இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? விளக்கம் தருவார்களா?

க. கணேசலிங்கம்
யாழ்ப்பாணம்.

### இறைவனின் சிரசில் எண்ணெய் சாத்தக் கட்டணமா?

வடமராட்சியில் மிகவும் பெயர்பெற்ற தேவஸ்தானம் ஸ்ரீ வல்லிபுர-ஆழ்வார் தேவஸ்தானம். அங்கே 9-6-2001 அன்று எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. மனிதப் பிறவியாகிய எமக்கு வாழ்க்கையில் ஒரு சந்தர்ப்பம் தெய்வத்தின் சிரசில் எமது கையால் எண்ணெய் வைத்து விடுவது.

ஆனால் புகழ் பெற்றதும், மிகவும் வசதி படைத்ததும், வருமானம் நிறையக் கிடைக்கின்றதுமான இக் கோயிலில் எண்ணெய் சாத்துவதாக இருந்தால் 10 ரூபா ரிக்கெற் எடுத்தால்தான் எண்ணெய் சாத்த முடியும் என்ற நிலையை அங்கே போன மக்கள் உணரக்கூடியதாக இருந்தது.

அத்துடன் இப்படி எந்தவொரு பெயர் பெற்ற தேவஸ்தானத்திலும் எக்காலத்திலும் நடைபெற்றதாக நான் அறியவில்லை. இந்த நிலை இனிமேல் எந்தவொரு தேவஸ்தானத்திலும் நடைபெறக்கூடாது என்பதே எமது விருப்பம்.

பத்து ரூபா என்பது இன்றைய நிலையில் பெரிய பணம் அல்ல. எனினும் அன்று நடைபெற்ற நிகழ்வில் இப்பணம் மக்களிடம் அறவிடுவது மிகப்பெரிய தவறு என்பதே என்னுடைய கருத்தாகும். ஆலய தர்மகர்த்தாக்கள் இதனைப் புரிந்துகொண்டால் சரி.

வல்வை. குணராஜ்

# யாழ். ஆஸ்பத்திரி 'எக்ஸ்-ரே' பிரிவு மீண்டும் இயங்க ஆரம்பித்தது

## எனினும் பற்சிகிச்சை 'எக்ஸ்ரே பிலிம்' வரவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். போதனா வைத்தியசாலை 'எக்ஸ்-ரே' பிரிவு ஒருவாரத்தின் பின் நேற்று முன்தினம் மாலை 3.00 மணி முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் தடுத்து வைக்கப்பட்ட பிலிம் கழுவுவதற்காக பாவிக்கப்படும் மருந்து டெவலப்பர்விமானம்மூலம் அனுப்பி வைக்கப்பட்டதை அடுத்து 'எக்ஸ்-ரே' எடுக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டன.

அனுப்பி வைக்கப்பட்ட மருந்து 3வாரங்களுக்குமாத்திரமேபோதுமானதுஎன்றுதெரிவிக்கப்படுகின்றது. போதிய மருந்து உடன் அனுப்பப்படாத பட்சத்தில் 'எக்ஸ்-ரே' பிரிவு மீண்டும் ஸ்தம்பிதமடையலாம் என ஆஸ்பத்திரி வட்டாரத்தில் இருந்து தெரியவருகின்றது.

இதேவேளை—

பற்சிகிச்சைக்கென 'எக்ஸ்-ரே' எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. பற்களை 'எக்ஸ்-ரே' எடுப்பதற்கான பிலிம் வகைகள் முற்றாகமுடிவடைந்தமையினாலேயே இந்த நிலை என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் 300 பற்சிகிச்சை .எக்ஸ்-ரே' பிலிம்களுக்கு விண்ணப்பித்த போதும்பாதுகாப்பு அமைச்சு 30 பிலிம்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் ஒரு பெட்டியில் 150 பிலிம்கள் இருப்பதாகவும்—

இதனைப் பிரித்து அதிலிருந்து 30 பிலிம்களை எடுக்க முடியாது எனவும் —

அதனால் பிலிம்களை அனுப்ப முடியவில்லை எனவும்—

கொழும்பு மருந்தக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. (ம-15)

### இராணுவ வாகனங்கள் மோதின

நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இராணுவ வாகனங்கள் இரண்டு நேருக்கு நேர் விபத்துக்குள்ளானதால் சுமார் ஒரு மணிநேரம் வீதிப் போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டது.

ஒரு வாகனத்தை மற்றைய வாகனம் விலத்த எத்தனித்த போதே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும் அவற்றில் பயணம் செய்த இராணுவத்தினர் காயம் ஏதுமின்றித் தப்பினர். வாகனம் ஒன்றுக்குச் சேதம் ஏற்பட்டது.

பின்னர் விபத்து நடந்த இடத்துக்கு வந்த இராணுவப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இரு வாகனங்களும் அந்த இடத்தில் இருந்து அப்புறப் படுத்தப்பட்டன. (உ-6)

### சித்திரக் கண்காட்சி மூன்று நாள்களுக்கு

யாழ், கல்வி வலயத்தின் சித்திரக் கண்காட்சியை நாளைதிங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஸ்ராலிக் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியை திங்கள் தொடக்கம் புதன் வரையான மூன்று நாள்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடலாம் என்று யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10)

### போட்டிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத் தகவுடைய அதிகாரிகள் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் எதிர் வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 7 ஆம் திகதி சனிக்கிழமையும், திறந்த போட்டிப் பரீட்சை மறுநாள் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்றும் —

பரீட்சார்த்திக்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-10)

### திருப்பலி

கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை மாதாவின் திருநாள் திருப்பலி நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மாதாவின் திருவிழா திருப்பலியுடன் ஆரம்பமாகியது. (ஐ-10)

### மாம்பழப் பிரியர்களுக்கு ஓர் அதிர்ச்சிச் செய்தி!

யாழ்ப்பாணம், ஜூலை 1

குடாநாட்டில் மாம்பழச் சீஸன் தொடங்கியிருக்கிறது. சந்தைகளில் மாம்பழ வகைகள் குவிந்து கிடக்கின்றன. வீதியோரங்களில் கண்ணைக் கவரும் மஞ்சள் வர்ணத்தில் மாம்பழ வகைகள் அடுக்கியும், குவித்தும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்தச் சமயத்தில் மாம்பழப் பிரியர்களுக்கு அதிர்ச்சி தரும் தகவலை மருத்துவ வட்டாரங்கள் வெளியிட்டிருக்கின்றன.

இரசாயனப் பொருள்கள் கொண்டு செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழ வகைகள் பெருமளவில் சந்தைகளுக்கு விற்பனைக்கு வந்திருப்பதாகவும் —

அத்தகைய பழங்களை வாங்கி உண்போர் உடல் நலக் கேடுகளுக்கு உள்ளாகும் ஆபத்து இருப்பதாகவும் —

மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்திருக்கின்றன.

நன்கு முற்றி இயற்கையாகப் பழுத்த பழங்கள் ஒருபோதும் முழுவதும் 'பளிச்' என்ற மஞ்சள் நிறத்தைப் பெறுவதில்லை என்றும் —

'போமலின்' போன்ற சில இரசாயனப் பதார்த்தங்கள் மூலம் செயற்கை வழியில் பழுக்க வைக்கப்பட்ட பழங்களே முழுவதுமாக மஞ்சள் நிறமடைந்து பழுத்து கண்ணைக் கவரும் வகையில் காட்சி தரும் என்றும்—

அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றன. (ஐ-7-28)

### விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூலை 1

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்டு வரும் 15, 17 வயதினர்களிடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

★ சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அணி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி. (விக்டோறியாக் கல்லூரி மைதானம்)

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்)

**17 வயதுப்பிரிவு**

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி (யாழ் இந்துக் கல்லூரி மைதானம்)

★ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி (மகாஜனாக் கல்லூரி மைதானம்.)

★ சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி (சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்) (ம-85)

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டு இணைப்பகமும்—வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து வெளியிடும் 'மகிழ்ச்சிகரமான கற்றல்' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நூல் வெளியீட்டு விழாவில் நூலின் வெளியீட்டு உரையை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளையும், நூலின் ஆய்வுரையை வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நிகழ்த்துவர். சிறப்புரைகளை யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நிகழ்த்துவர்.

நூலின் முதல் பிரதியை யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெயராஜா பெற்றுக் கொள்வார். (ம-6)

### இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறையினர் வழங்கும் 'மதுர கானங்கள்' திரை இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக் கிழமை பகல் இரு அமர்வுகளாக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (ஐ)

# மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1973ஆம் ஆண்டு பிறந்த கார்த்திகை 3ஆம் பாதம், 5'4" உயர, அழகிய, நிறமுள்ள, கனேடிய பிரஜா உரிமையுள்ள, கனடா பல்கலைக் கழகத்தில் படித்து அங்கு வேலை பார்க்கும் பெண்ணுக்கும் மற்றும் 1977ஆம் ஆண்டு உத்தரம் 2ஆம் பாதம் 5'4" உயரமுள்ள கொழும்பில் தனியார் கல்வி நிலையத்தில் கம்பியூட்டர் விரிவுரையாளராக வேலை செய்யும் பெண்ணுக்கும் பெற்றோர் டாக்டர், என்ஜினியர், எக்கவுண்டன் மணமகனைத் தேடுகின்றனர். விரும்பியோர் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்.

*முகவரி:* **N.கணேஸ,** "சுமன்கலை" *பிரம்படி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில், அல்லது ராஜன்,* T.P.597254. *கொழும்பு.*

*குறிப்பு:* **கலியாண முகவர்களும் தொடர்புகொள்ளலாம்.**

(89617)

---

உ

ஸ்ரீ ஆதி ஞானவைரவ சுவாமி துணை

## தொல்புரம் - பத்தானையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ ஆதிஞான வைரவ சுவாமி திருக்கோயில்

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொல்புரம் பத்தானையம்பதி ஸ்ரீ ஆதி ஞானவைரவ சுவாமி திருக்கோயில் மணவாளக்கோலமும் சங்கா பிஷேக விழாவும் நாளை (02-07-2001) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகி பெருமானுக்கு அஷ்டோத்திர (108) சங்காபிஷேகம் நடைபெற்று அதைத்தொடர்ந்து மாகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

*சங்காபிஷேக பிரதம குரு:-* "வாமதேவ சிவாச்சாரியார"

**பிரம்ம ஸ்ரீ க.சிவசுப்பிரமணியக்குருக்கள** (அராலி)

*விசேட நிகழ்ச்சி:*

*சங்கீத கதாப்பிரசங்கம்:-* "பிரசங்க பூஷணம"

**நடேசன் சிவசண்முகமூர்த்தி** B.A. (ஆசிரிய ஆலோசகர்)

விடயம்:- "அருள் மழை பொழியும் ஆதிஞான வைரவ சுவாமி"

திரு.க.லோகேஸ்வரன்

- ஆலய அறங்காவலர்.

*விழா சிறப்புற வாழ்த்துபவர்:-*

**விநாயகர் தொலைத்தொடர்பு நிலையம்**

*உரிமையாளர்:-* திரு.நாகேஸ் நவரத்தினம்

*மடத்துப் பிள்ளையார் கோயிலடி, தொல்புரம்.* T.P. 070 21 2782

(89612)

---



உ

## இளவாலை சித்திரமேழி

## அருள்மிகு ஞானவயிரவர் ஆலய

புனராவர்த்தன அஷ்ட பந்தன

பஞ்சகுண்ட பக்ஷ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அடியார்களே!

இன்று (01.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். நாளை (02.07.2001) திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில் வைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

*ஆலய பிரதமகுரு:* சிவாச்சார்ய மணி

**இராம.பாலச்சந்திரக் குருக்கள்**

*சர்வபோதகம்:* **சிவஞானபாஸ்கரன்**

**தா.மஹாதேவக் குருக்கள்**

(காயத்திரி பீடம், இணுவில்)

அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(89627) -ஆலய பரிபாலன சபை.

---

## தீவக பாக்கியம்

## குழந்தைகள் வைத்திய நிலையம்

## 140 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவை

நாளை (02.07.2001) திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் எமது வைத்திய சேவை ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள்:

- நாரந்தனை - தம்பாட்டி.
- பழைய பஸ் கம்பெனியடி - வேலணை.
- பெருங்பாடு கந்தசுவாமி ஆலய முன்பாக - புங்குடுதீவு.

- பாக்கியம் வைத்தியசாலை,

ஊர்காவற்றுறை.

(89626)

---

# கண்ணீர் அஞ்சலி



## தில்லையம்பலம் ஜெயமோகன்

மானிப்பாய் வடகிழக்கைச் சேர்ந்த தில்லையம்பலம் ஜெயமோகன் 30.06.2001இல் குவைத்தில் காலமாகியதையிட்டு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கு கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*மானிப்பாய் வடகிழக்கு, ஆனந்தா வீதி, மானிப்பாய்.*

இராஜமோகன் - குடும்பத்தினர்.

(89635)

---


## ஹற்றன் நஷனல்

## திவி சக்தி

சேமிப்புக்கணக்குகள்

காலத்துக்குத் தக்க நன்மைகள் கொண்ட தனித்துவமான கணக்கு அதியுயர்வட்டியும் அதி சலுகைகளையும் கொண்டது

★ அதி உயர் வட்டி - 14% வருடாந்தம்

★ ஆகக்குறைந்த வைப்பு - ரூ 10,000/-

★ வட்டி நாளாந்தம் கணிக்கப்பட்டு மாதாந்தம் வரவில் வைக்கப்படும்.

**வருடாந்த தேறிய வட்டியாக 14.93% கிடைக்கும்**

★ மீளப்பெறுவதில் சலுகைகள் வட்டியில் எந்தக்குறைப்புமில்லாமல் மாதத்துக்கு இரண்டு மீளப்பெறுதல் செய்ய வாய்ப்பு

ஒரே மாதத்தில் இரண்டுக்கும் அதிகமான மீளப்பெறுதல் செய்தால் அல்லது ஆகக்குறைந்த வைப்பான ரூபா 10,000 திலும் குறைவான தொகையே வைப்பில் இருந்தால் அந்த மாதத்து வட்டி ஹற்றன் நஷனல் வங்கியின் சேமிப்புக்கணக் கின் நடைமுறையிலிருக்கும் வட்டி வீதப்படி கணிக்கப்படும்.

-இந்தக் கணக்கு பத்தும் விமன சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகாது.

**விவரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்.கிளையுடன் தொடர்புகொள்ளுங்கள்**

**ஹற்றன் நஷனல் வங்கி**

(C/17264) **உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி.**


---

உ

## வேலணை தெற்கு துறையூர் இலந்தை வனம்

## ஹரிஹர புத்திர (ஐயனார்) சுவாமி திருக்கோயில்

## நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் ஆனி மாதம்

01-07-2001 ஆனி 17 ஞாயிறு காலை எண்ணெய்க் காப்பு சாத்துதல்-

( காலை 8 மணி முதல் - மாலை - 5 மணி வரை)

02-07-2001 ஆனி 18 திங்கள் மஹாகும்பாபிஷேகம்

(காலை 9 மணி முதல் - 10.08 மணி வரையுள்ள சுப முகூர்த்தம்)

பிரதிஷ்டா சிவாச்சாரியார்:

சிவாகம வித்பத் ஜோதி சிவாகம ஞான பானு

பண்டிதர் **சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்** -

*புன்னாலைக்கட்டுவன் (நல்லை ஆதீன சிவாச்சாரியார்)*

சர்வ. போதகாச்சாரியார்:

சிவாகம கிரியா சிரோன்மணி கிரியா பூசணம்

முத்தமிழ் வித்தகர்

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்**

*(தர்மகர்த்தா சிவன் கோயில் - புங்குடுதீவு)*

ஆலய குரு:- **பிரம்மஸ்ரீ குகதாஸசர்மா**

**அனைவரும் ஐயனாரைத் தரிசித்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.**

**சரணம் ஐயப்பா!**

இங்ஙனம்

மேற்படி ஆலய பரிபாலன சபை

(89608)

---

## ரயில்வே திணைக்களம் தனியார் மயமாகாது

கொழும்பு,ஜுலை1

ரயில்வே திணைக்களம் தனியார் மயமாக்கப்படமாட்டாது என்று போக்கு வரத்து அமைச்சர் தினேஷ் குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்களம் தனியார் மயப்படுத்தப்பட இருப்பதாக வெளி யான செய்திகளை அவர் மறுத்துள் ளார். (ஐ)

## பஸ் சேவைகளை இரவில் நீடிக்கக் கோரிக்கை

வலி.வடக்கு,ஜுலை1

குடாநாட்டில் பஸ் சேவைகளை இரவு 7.30 மணிவரை நடத்துமாறு 513ஆவது படையணியின் கட்டளை அதிகாரி வடபிராந்திய போக்குவரத் துச் சபையிடம் கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவுநேர ஊரடங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்பட்டிருப்பதை அடுத்தே மக்களின் நன்மை கருதி பஸ்சேவை நேரத்தை நீடிக்குமாறு அவர் கேட்டிருந்தார்.

உடுவில், தெல்லிப்பழை, நல் லூர், சண்டிலிப்பாய் பிரதேச செய லாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதி கிராம அலுவலர்களுடனான கலந்து ரையாடலின்போது இந்த விடயம் தொடர்பாக படை அதிகாரி பிரஸ்தா பித்தார்.

தற்போது வெளியிடங்களுக் கான கடைசி பஸ்சேவைகள் மாலை 6மணிக்கு யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து ஆரம்பமாகின்றன. கடைசி பஸ்சேவைகளை இரவு 7.30 மணிக்கு ஆரம்பித்து நடத்துமாறு தற்போது கேட்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## கால்நடை வைத்தியசேவை

அச்சுவேலி,ஜுலை1

கோப்பாய்ப் பிரதேச கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் நடமாடும் வைத்தியசேவைகள் மாதத்தில் இரண்டு தினங்கள் இடைக்காட்டில் இடம்பெறும்.

மாதத்தின் முதலாவது புதன்கிழ மையும் நான்காவது புதன்கிழமை யும் கால்நடை வைத்தியர் அலுவல கத்தின் நடமாடும் சேவைகள் இடைக் காட்டில் நடைபெறும் என்று கோப் பாய்ப் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி செல்வி த.செல்வவினிதா அறிவித்துள்ளார். (ஐ-11)

## கால்நடை சந்தை இடம்மாற்றம்

வடமராட்சி,ஜுலை1

மந்திகை கால்நடைச் சந்தை கடந்த வாரம் முதல் புலோலி சாரை யடியில் உள்ள பால் கொள்வனவு, விற்பனை நிலைய வளவுக்கு மாற் றப்பட்டுள்ளது.

வடமராட்சி கால்நடை வளர்ப் போர் சங்கத்தினால் நடத்தப்படும் இச்சந்தை வாரம்தோறும் சனிக்கிழமை களில் நடைபெற்று வருகிறது. (ஐ-173)

## சலவை தொட்டிகள் அமைப்பு

அச்சுவேலி,ஜுலை1

அச்சுவேலி தெற்கு மருதம் குளத தில் 70 ஆயிரம் ரூபா செலவில் சலவைத் தொழிலாளர்களுக்கான தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதி சலவைத் தொழிலாளர்கள் வரட்சி யான காலப்பகுதியில் தமது தொழிலை வசதியான முறையில் செய்வதற்கு மருதம்குளத்தில் சல வைத் தொட்டிகள் அமைக்கப்பட் டுள்ளன.

45 அடி நீளமான 7 தொட்டிகளை அமைப்பதற்கான நிதியை வலி கிழக்கு பிரதேச சபை வழங்கியது. அச்சுவேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம் தொட்டிகளின் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்ததை அடுத்து சலவைத் தொட்டிகள் தொழி லாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ஐ-11)

## நகரசபை அலுவலகம் இடம் மாறும்

வடமராட்சி,ஜுலை1

வல்வெட்டித்துறை நகரசபை அலுவலகம் நவீனசந்தைக் கட்டடத் தின் மேல்மாடிக்கு விரைவில் மாற்றப் படவுள்ளது.

தற்போது நகரசபை இயங்கும் கட்டடத்தில் போதிய வசதிகள் இன் மையால் இம்மாற்றம் செய்யப்பட வுள்ளது.

நவீன சந்தையின் மேல்மாடி 45 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஐ-173)

# 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வனஜா ரவீந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையாராகிய

**அமரர் வேலுப்பிள்ளை விவேகானந்தர்**

அவர்களின் 31ஆம் நினைவு நாளாகிய இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
யா/அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை.

(89623)

# 90ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1967 - 09 - 30

உதிர்வு 2001 - 04 - 02

## அமரர் கதிரவேல் சுரேஸ்குமார்

தாய், தங்கை கதறித் துடிக்க
எங்களை ஏங்க விட்டு - ஏன்
பிரிந்து சென்றாய்? - உன்
நினைவோடு என்றும் வாழ்வோம்!

*187/34, ஆஸ்பத்திரி வீதி,*
*யூனியன் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(89633)

தாய், தங்கை.

**ராஜா** யாழ்ப்பாணம்

9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்

**CITIZEN சிட்டிசன்**

தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே)

(சி17286)

**லஷ்சுமி** இனுவில்.

விஜயகாந்த்,லைலா, நாசர்
நடிப்பில்

**கள்ளழகர்**

(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
இனிய பாடல்கள், சண்டை காட்சிகள்
நிறைந்த படம்.
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (ப.நே.)
(கடைசி வாரம்)

**நாகம்ஸ்**
சுன்னாகம்

சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி,
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த

**முதலமைச்சர் ஜெயந்தி**

வெண்திரையில் முதன் முதல்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தியின் படம்
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு

★ உங்கள் முக அமைப்புக்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ள,
★ மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்திக்கொள்ள,
★ கண்கள் பரிசோதித்துக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**எரிக் கணேஷ்**

மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டுமிடமும்
*564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

கிளைகள்:
*இல.90, கே.கே.எஸ். வீதி,*
*(பழைய பொலிஸ் நிலையம் முன்பாக)*
*சுன்னாகம்.*

*91, கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில்.*

★ பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். (89640)

# தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கூட்டுறவாளர் பாராட்டுவிழாச் சிறப்பிதழ்

(30-06-2001இல் வெளிவந்த சிறப்பிதழின் தொடர்ச்சி)

## விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் சங்கக் கூட்டுறவாளர்கள்

(30-06-2001 இல் வெளிவந்த படங்களின் தொடர்ச்சி)



திரு. த. [illegible]
தையிட்டி ஊறணி,
காங்கேசன்துறை.



திரு. மு. முத்துலிங்கம்
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.



திரு. சி. கதிரவேலன்
மாவை - கலட்டி



திரு. பொ. குருதேவன்
வீமன்காமம்,
தெல்லிப்பழை.



திரு. க. கேதாரசிங்கம்
வயாவிளான்.



திரு. க. மகாலிங்கம்
வீமன்காமம்.



திரு. நா. மார்க்கண்டு
இளவாலை.

திரு. ம. மரியாம்பிள்ளை
ஊறணி,
காங்கேசன்துறை.

திரு. நா. சிவராஜலிங்கம்
வீமன்காமம் வடக்கு.

(சி17263)

**வெஸ்ரேன் இசை பயிலகம்**

★ ஓகன் ★ கிற்றார் ★ மெலோடிக்கா
★ ரம்ஸ் ★ மிருதங்கம்

திங்கள், வியாழன் பிற்பகல் 3மணி
*419, கோயில் வீதி, நல்லூர்.*
புதன், சனி பிற்பகல் 3 மணி.
*கிளை:* நூல் நிலையம் முன்பாக
*சுன்னாகம்.*

S.யோசுதன்
(நிர்வாகி)

(89634)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 05 - 11 - 1938

மறைவு 29 - 06 - 2001

## அமரர்
## செல்லத்தம்பி அமரசிங்கம்

(முன்னாள் உப தபாலதிபர், ஆனைப்பந்தி)

இளமையிலே தந்தையை இழந்த எங்களுக்கு ஆதரவளித்து வாழ்விலும் தாழ்விலும் துணையாக இருந்து நாம் உயர வழிகாட்டிய எங்கள் அன்பு அமரசிங்கமாமா 29.06.2001 அன்று சிவபதம் அடைந்தமையை அறிந்து சொல்லொணாத் துயர் அடைகின்றோம்.

அவரின் ஆத்மா அமைதி அடைய இறைவனை வழிபடுவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*அன்பு மருமக்கள்:*
ந.பத்மநாதன் (பிறைசூடி),
ந.வசந்தானந்தன்,
ந.தங்கவேல்,
சி.மகேஸ்வரி,
ந.நடேஸ்வரி.

*566/4, கே.கே.எஸ். றோட்,*
*யாழ்ப்பாணம்.*

(89646)

# மரண அறிவித்தல்கள்

## பாவிலு சத்தியசீலன் B.A.HONS (கவிஞர்)

(இளைப்பாறிய முன்னாள் ஆசிரியர், இந்துக் கல்லூரி, மானிப்பாய்; முன்னாள் மெல்லிசை பாடலாசிரியர், இலங்கை வானொலி)

அல்வைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு சத்தியசீலன் அவர்கள் நேற்று (30.06.2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலு-விக்ரோறியா ஆகியோரின் அன்பு மகனும், கலாதேவியின் அன்புக் கணவரும், சின்னத்துரை (இந்தியா), சிலுவைராசா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமிழ்தினி, மகிழ்மலர், அருள்வண்ணன், அமிர்தவர்சினி ஆகியோரின் அருமைத் தந்தையாரும் யூலன் அமலதாஸ்(கொழும்பு), றொபின்சன்(நவாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சைமின், சப்னா, மரின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கல்லுண்டாய் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னப்பா வீதி,*
*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

(89621)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## முருகர் செல்லத்துரை

வைத்திலிங்கம் வித்தியாசாலை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த முருகர் செல்லத்துரை(27.06.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், தவராசா(கொழும்பு), நாகராசா(கிளி. மரக்காலை உரிமையாளர்), கமலநாதன்(பேபி, இத்தாலி), நிர்மலா(கனடா), ஜெயநாதன்(கனடா), யுவதாசன்(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி, இராசாத்தி, நிலா, தவராசா, விஜயகுமாரி, ஜாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுனன், ரஞ்சித்(இத்தாலி), றஜிதா, றஜிக்குமார், ஜனோஜா, ஜென்சன், சாளி, தனுசி, நிசாகன், சயந்தன், ஜெனித்தா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற காந்தி மற்றும் தங்கம்மா, கந்தையா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மாரிமுத்து, செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.07.2001) ஞாயிற்றுகிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*வைத்திலிங்கம் வித்தியாசாலை வீதி,*
*வண்.வடமேற்கு,*
*ஆனைக்கோட்டை.*

(89632)

தகவல்:
நாகராசா (கிளி)
(மரக்காலை உரிமையாளர்)

# கருணாநிதியையும் மனைவியையும் மாடியிலிருந்து இழுத்து வந்தனர்

சென்னை,ஜூலை1

"மாடியில் உள்ள படுக்கையறைக கதவை உடைத்து உள்நுழைந்த பொலீஸார் நித்திரையில் இருந்த மு.கருணாநிதியையும் அவரது பாரியார் ராஜாத்தி அம்மாளையும் மாடிப் படிகளில் தரதரவென இழுதது வந்தனர்"

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி நேற்றுக் கைது செய்யப்பட்ட சம்பவத்தை நேரில் கண்டவரான அவரது மருமகன் அரவிந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கைது செய்வதற்கான 'வாரண்டோ' 'சார்ஜ் சீற்றோ' எதுவும் இன்றி திடீரென வந்த பொலீஸார் வீட்டினுள் நுழைந்து, படுக்கையறைக் கதவை உடைத்துப் புகுந்து, உடனடியாக நீங்கள் எங்களுடன் பொலீஸ் நிலையம் வரவேண்டும் என்று கருணாநிதியிடம் சொன்னார்கள். தரைத் தொலைபேசி இணைப்புக்களையும் அவர்கள் துண்டித்து விட்டனர்.

இதற்கிடையில் தனது கைத் தொலைபேசி மூலம் முரசொலி மாறனைத் தொடர்பு கொண்டு கலைஞர் நிலைமையைத் தெரிவித்தார். விரைந்து வந்த மாறன் "கைது செய்வதற்கான ஆணை எங்கே? எதற்காக அவரை அழைத்துப் போகிறீர்கள்?" என்று பொலீஸாரிடம் கேட்டார்.

இதனை அடுத்து பொலீஸ் அதிகாரிகள் முரசொலிமாறனைப் பிடித்துத் தள்ளிவிட்டு கலைஞரைக் கீழே இழுத்துக் கொண்டு வந்து குண்டுக் கட்டாகத் தூக்கி காரில் போட்டார்கள். கைது செய்யப்பட்ட பின்னர் கலைஞரை வேப்பேரி பொலீஸ் நிலையத்தில் வைத்திருந்தனர். அங்கு வைத்து அவரது மனைவிகள் இருவரையும் மகள்களையும் மற்றும் உறவினர்களையும் பொலீஸார் வெருட்டி உருட்டி மிரட்டியெடுத்தனர்.

பொலீஸாருடன் கலைஞரைத் தனியாக அனுப்புவதற்கு அவரது குடும்பத்தினர் பயந்தனர்.

"அவரை எப்படித் தனியாக அனுப்புவது? நாங்களும் கூடவே வருகின்றோம்" என்று அவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்தனர். ஆனால பொலீஸார் அதனை ஏற்கவில்லை. கலைஞர் தம்முடன் தனியாகவே வர வேண்டும் என்று அவர்கள் பிடிவாதம் பிடித்தனர்.

இதனால் கலைஞரின் மனைவிகள், மகள்மார் மற்றும் உறவினர்களை ஓர் அறைக்குள் பிடித்துத் தள்ளிக் கதவை மூட முற்பட்டனர் பொலீஸார்.

அதேநேரம் -

கலைஞருடன் பொலீஸ் காரில் ஏறமுற்பட்ட முரசொலிமாறனை சில அதிகாரிகள் குண்டுக் கட்டாகத் தூக்கித் தலைக்கு மேல் தாங்கிச் சென்று ஓர் அறையினுள் போட்டனர்.

கலைஞர் நடத்தப்பட்ட விதம் காரணமாகவும் கைது செய்யப்பட்ட சமயம் அவர் ஆழ்ந்த நித்திரையில் இருந்து திடீரென விழித்துக் கொண்டதன் காரணமாகவும் அவரது கால்கள் மிக மோசமாக வீங்கி உள்ளன. அவரது சேர்ட்டும் கிழிக்கபபட்டிருந்தது. மாற்று உடை உடுத்தவும் அவருக்குப் பொலீஸார் அனுமதி வழஙகவில்லை - என்றார். (ம)

# இரு மத்திய அமைச்சர்களான முரசொலிமாறன், பாலு கைது!

## தமிழகம் எங்கும் 8,000 பேர் காவலில்!!

கருணாநிதி கைது செய்யப்பட்ட சமயம் ஏற்பட்ட இழுபறியில் பாதிப்படைந்த மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு வைத்து அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை மற்றொரு மத்திய அமைச்சரான ரி.ஆர்.பாலுவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

பொலீஸார் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்தது உட்பட சில குற்றச்சாட்டுகள் இருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன. இதேசமயம் -

கருணாநிதி கைது செய்யப்பட்டதை அடுத்து தமிழகத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என 8 ஆயிரம் பேர் தமிழகம் எங்கும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். (உ)

## ஸ்டாலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத் தயாராக உள்ளேன்" - என்றார் ஸ்டாலின்.

தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார், முன்னாள் தி.மு.க.அமைச்சர்கள் கோ.சி.மணி, கே.பொன்முடி ஆகியோரும் இதே வழக்குக்காகக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கருணாநிதியின் மனைவி தயாளு அம்மையார், மகள் செல்வி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## குண்டு வீச்சு

யாழ். குடாநாட்டின் மீது பெரும் எடுப்பில் தாக்குதல் நடத்தப் புலிகள் தீட்டியிருந்த திட்டத்தை விமானப் படையினர் முறியடித்துவிட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்திருக்கிறது.

நேற்றுக் காலை விமானப் படையின் தாக்குதல் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சின் போது பூநகரிப் பகுதியில் புலிகளின் பல நிலைகள் தாக்கி அழிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய அளவில் கண்டனம்

கலைஞர் கருணாநிதி கைது செய்யப்பட்ட போது அவர் நடத்தப்பட்ட விதம் குறித்து அகில இந்திய ரீதியில் கட்சிகளும் அமைப்புக்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பல தலைவர்களும் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## நிலைமையை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீய ஜனதா, தி.மு.க. உள்ளிட்ட தேசிய ஜனநாயக முன்னணியின் தமிழகப் பிரிவு ஏகமனதாக மத்திய அரசைக் கோரியிருப்பதும் -

இந்தப் பின்னணியில் தேசிய முன்னணியில் அகில இந்தியத் தலைவர்கள் நேற்றுமாலை புதுடில்லியில் கூடி நீண்ட நேரம் தமிழக நிலைமை குறித்து மந்திராலோசனை நடத்தியிருப்பதும் -

தமிழக அரசு தொடர்பாக மத்திய அரசு திடீரென அதிரடி நடவடிக்கை எதனையும் எடுப்பதற்கு வழி கோலலாம் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இந்திய மத்திய அமைச்சரவையின் கூட்டத்தின் பின்னரே மத்திய அரசின் நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும் என சில வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## வாஜ்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பதாகவும், இது தொடர்பாகத் தமது எதிர்ப்பைத் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு அவர் தெரிவித்திருப்பதாகவும் பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் சொன்னார்.

நேற்றுக் காலை தமிழக முதல்வருடன் தொடர்புகொள்ளப் பிரதமர் முயன்றார். ஆனால் முடியவில்லை. நேற்றிரவு வரை ஜெயலலிதா பிரதமருடன் தொடர்புகொள்ள முயற்சிக்கவேயில்லை என்று பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஜெயலலிதாவுடன் தொடர்பு கொள்ள முடியாதிருந்ததை அடுத்து பிரதமர் தமிழக தலைமைச் செயலாளர் பி.சங்கருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கருணாநிதி கைது தொடர்பான சம்பவங்கள் குறித்துக் கடும் கண்டனம் தெரிவித்ததோடு, இந்தச் சம்பவங்கள குறித்து விரிவான விளக்க அறிக்கை ஒன்றைத் தமக்கு சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டார்.

எனினும் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிவரை அத்தகைய விளக்க அறிக்கை எதனையும் தமிழக தலைமைச் செயலர் சமர்ப்பிக்காததை அடுத்து, மத்திய உள்துறை அமைச்சின் செயலாளர், தமிழக ஆளுநர் பாத்திமா பீபியுடன் தொடர்புகொண்டு இன்று காலைக்குள் மாநில நிலைமை குறித்து விளக்க அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு மாநில ஆளுநரைக் கோரினார்.

தமிழக நிலைமை குறித்து பிரதமர் வாஜ்பாய், இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனுடனும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவருக்கு விளக்கினார்.

தமிழ்நாட்டில் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகள் குறித்தும், மூத்த அரசியல்வாதியான கருணாநிதி மிகக் கேவலமான முறையில் நடத்தப்பட்டது குறித்தும் மத்திய அரசின் கவலையையும் ஜனாதிபதியிடம் பிரதமர் தெரிவித்தார். (உ-9)

# சன் ரீ.விக்கு எச்சரிக்கை!

சென்னை,ஜூலை1

கருணாநிதி கைது செய்யப்பட்ட காட்சியை அப்படியே படம் பிடித்து ஒளிபரப்பி வரும் 'சன் ரி.வி'க்கு தமிழகப் பொலீஸார் மிரட்டல் விடுத்திருக்கின்றனர்.

"இந்தக் காட்சியை திருப்பித் திருப்பி ஒளிபரப்புவதை சன் ரி.வி. உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லையேல் வன்முறையைத் தூண்டும் குற்றச்சாட்டின் பேரில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் முத்துக்கருப்பன் எச்சரித்திருக்கின்றார்.

தங்களது அலுவலகத்துக்குள் புகுவதற்குத் தயாராகப் பொலீஸார் அலுவலகத்தைச் சுற்றிவளைத்து நிற்பதாகவும் -

அலுவலகத்துக்கு ஊழியர்களை வராமல் பொலீஸார் தடுத்து வருவதாகவும் -

சன் ரி.வியின் பிரதம ஆசிரியர் வி.மாலன் தெரிவித்திருக்கின்றார்.

# படுக்கை அறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் இருந்தும் கண்டனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

முன்னைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டு, பின்னர் தற்போது சென்னை மாநகர ஆணையாளராக ஜெயலலிதா அரசினால் நியமிக்கப்பட்ட அ.அச்சரயாலு என்பவர் கொடுத்த முறைப்பாட்டின் பேரிலேயே கருணாநிதியும் ஏனையோரும் கைது செய்யப்பட்டனர்.

கருணாநிதி வீட்டுக்குள் பொலீஸார் நுழைந்தது பற்றிய தகவல் கிடைத்ததும் அவரது மருமகனும் மத்திய வர்த்தகத் துறை அமைச்சருமான முரசொலிமாறன் அங்கு விரைந்து வந்தார்.

கைது வாரண்ட் ஏதுமின்றி கலைஞர் கருணாநிதியைப் பொலீஸார் கைது செய்யமுடியாது என்று தெரிவித்து கைது முயற்சியை முரசொலிமாறன் தடுத்தார் எனக் கூறப்படுகின்றது.

அப்போது இடம்பெற்ற காரசாரமான விவாதத்தை அடுத்து, பொலீஸார் கருணாநிதியைத் தூக்கித் தரதரவென இழுத்துச் சென்றனர். தடுக்க முயன்ற முரசொலிமாறனும், ரி.ஆர்.பாலுவும் ஏனையோரும் பலவந்தமாக தள்ளி விடப்பட்டனர். மாறன் இதனால் சிறிய காயத்துக்குள்ளானார்.

கருணாநிதியைக் குண்டுக்கட்டாகத் தூக்கித் தமது வாகனத்துக்குள் தள்ளிய பொலீஸார் அவரைத் தமது குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் தடுத்து வைத்திருந்தனர். பின்னர் அவரை வேப்பேரி பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு கருணாநிதி ஏற்றிச் செல்லப்பட்ட காருக்குள் முரசொலி மாறனும் பலவந்தமாக ஏறி அமர்ந்து கொண்டார். ஆனால் பொலீஸார் அவரை ஒரே அலாக்காகத் தூக்கி வெளியே எடுத்து தாங்கிச் சென்று பொலீஸ் நிலைய கல் 'பெஞ்ச்' ஒன்றில் தொப்பெனப் போட்டனர்.

பொலீஸ் நிலையத்தினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் கருணாநிதியுடன் சில செய்தியாளர்களால் உரையாடமுடிந்தது. அப்போது ஒரு செய்தியாளரின் 'நோட்' புத்தகத்தை வாங்கிய கருணாநிதி அதில் "அறம் வெல்லும்" என்று தமிழில் எழுதிக் கொடுத்ததோடு, தாம் கையாளப்பட்ட விதம் குறித்து அவர்களுக்குச் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

வீட்டிலிருந்து வெறும் சேர்ட்டுடனும் சாரத்துடனும் இழுத்து வரப்பட்ட கருணாநிதி பின்னர் அதே உடுப்புடன் காலை 5 மணியளவில் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள முதன்மை அமர்வு நீதிபதி ஏ.அசோக் குமாரின் வீட்டுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு அவர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது முரசொலிமாறனும் அங்கு பிரசன்னமாகியிருந்தார். பொலீஸாருடன் ஏற்பட்ட இழுபறியில் கிழிந்துபோன தமது சேர்ட்டுடன் கருணாநிதி அப்போது காணப்பட்டார்.

பொலீஸாரின் முதல் தகவல் அறிக்கையைப் பார்வையிட்ட நீதிபதி கருணாநிதியை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தமது உடல் நிலைமை குறித்துக் கருணாநிதி நீதிபதியிடம் முறையிட்டதை அடுத்து, அவரை அவரது மருத்துவர் மற்றும் அரச மருத்துவர்களின் வைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தும்படியும் அவரை ஆஸ்பத்திரியில் வைத்திருக்கவேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை தெரிவித்தால் ஆஸ்பத்திரியில் வைக்கும்படியும் இல்லையேல் சிறைக்கு அனுப்புமாறும் நீதிபதி பணித்தார்.

எனினும் நீதிபதியின் உத்தரவையும் மீறி, வைத்திய பரிசோதனை செய்யாமலேயே அவரை சிறைக்குக் கொண்டுபோகப் பொலீஸார் முயற்சித்தனர். இதனை ஆட்சேபித்து சென்னை மத்திய சிறையின் முன்றிலில் கருணாநிதி சத்தியாக்கிரகம் செய்தார். சிலமணி நேரம் கழித்து டாக்டர்கள் வரவழைக்கப்பட்டு, அவரது உடல் நிலைமை சோதிக்கப்பட்டது. டாக்டர்கள் அளித்து அனுமதியை அடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.


**விளம்பரம் நாளை பிரசுரமாகும்**

இன்று வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த, நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த **IIS** கணனி நிறுவனத்தின் கணனி விற்பனை தொடர்பான விவரங்கள் அடங்கிய விளம்பரம் நாளைய உதயனில் பிரசுரமாகும் என்பதை அறியத்தருகிறோம்.

மேலதிக விவரங்களை

02.07.2001 உதயனில் பார்க்கத் தவறாதீர்கள்!

**இன்பம் பொங்கும் மாபெரும் இன்னிசை நிகழ்வு**

யாழ்.பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைத்துறையினர் பெருமையுடன் வழங்கும்

**"மதுர கானங்கள்"**

(திரைஇசை நிகழ்ச்சி)





இளமை, இனிமை, புதுமை
இவைகள் இணைந்த செம்மை
அதுவே 'மதுரகானத்தின்' தன்மை
உணர்ந்துபாருங்கள் இதுவே உண்மை

- இடம் : கைலாசபதி கலையரங்கு
காலம் : 01-07-2001 இன்று 10.00, 2.30 மணி

காணத்தவறாதீர்! அன்பளிப்பு: ரூபா 50/-100/-500/-1000/-

ஆதரவு: **சிசிலியன்** 32/5, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.

**முக்கிய அறிவித்தல்**

சுந்தர் வெளியீடு

இன்று நடைபெறவிருந்த தரம் 5 புலமைப்பரிசில் பொதுப் பரீட்சை எதிர்வரும் 05-07-01 (வியாழன்) பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

பாடசாலைகளுக்கான வெளியீடும் 06-07-01இல் வெளிவரும். அடுத்த பரீட்சை வழமைபோல் (08.07இல்).

(89644) சுந்தர்

**லிங்கம் சில்க் கவுஸின்**

**மாபெரும் ஆடி மாத சிறப்புத் தள்ளுபடி**

ஆடி மாதம் 2ஆம் திகதி முதல்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி நடைபெறவுள்ளது.

எனவே உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்!

இந்தியன் காஞ்சிபுரம், பனாறிஸ், கூறைச்சேலை, இந்தியன் நோமல் சாறி வகைகள், பஞ்சாபி, சோலிக்கிற், கவுண், சேட், ரீசேட், றெடிமேட் ரவுஸர், சிறுவர் - சிறுமியருக்கான கவுண் சூட் வகைகள், இம்போட் ரவுஸர் மற்றீரியல், சேட்டிங் - சூட்டிங் வகைகள், சற்றின் பலஸ், சில்க், சலஞ்சர், பப்பிளின், வேட்டி வகைகள், இந்தியன் சாரம், பிளேன் சாறி, கசானா துவாய்கள், பெட்சீற் வகைகள், பெனியன் வகைகள்

இவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள முந்துங்கள்.

**லிங்கம் சில்க் கவுஸ்**

18, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/7265)

உ

சிவமயம்

**கொக்குவில் அருள்மிகு மாத்தனைக் கந்தசுவாமி கோயில்**

**இராஜராஜேஸ்வரி அம்பாள்**

தாமிரலிங்க நூதன பிரதிஷ்டா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

காலம் : ஆனித் திங்கள் 18 ஆம் நாள் (02.07.2001) திங்கட்கிழமை
நேரம் : காலை 9 மணி முதல் 10.15 மணி வரையிலுள்ள சுப முகூர்த்தம்

என்பதனை அடியார்களிற்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம் பரிபாலன சபையினர், மாத்தனை, கொக்குவில்.

(89647)

**எமது ஓடியோ CD வெளியீடுகள்**

★ நிலவினிலே
★ அசத்தல்
★ அள்ளித் தந்த வானம்
★ இரு வாணிலா

வர்ணக்கலைவருடன் பதிவு செய்யப்பட்ட CD 300/-

**மெலோடியஸ் மியூசிக்**

303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/17268)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.